வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 | Reg. No. : P. 1632 | விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu — ඊළනාඩු

Email : eelanaduweekly@gmail.com | மலர் : 07 | 07.02.2026 சனிக்கிழமை | இதழ் : 38 | பக்கங்கள் : 08







# அவசரகாலச் சட்டம் ஒருபோதுமே அடக்குமுறை கருவியாக மாறாது!

## ஜனாதிபதி அநுரகுமார உறுதி



கொழும்பு, பெப். 07

மீள்கட்டியெழுப்பும் செயற்பாட்டை விரைவுபடுத்துவதற்காக மாத்திரமே அவசரகாலச் சட்டத்தை நீடிக்க வேண்டும் எனவும் அது ஒருபோதும் அடக்குமுறை கருவியாகப் பயன்படுத்தப்படமாட்டாது எனவும் ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

கண்டி - நியங்கொட பாடசாலை விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற டித்வா சூறாவளியால் வீடுகள் முழுமையாக சேதமடைந்த மற்றும் மண் சரிவு அபாயத்தில் உள்ளதாக அடையாளம் காணப்பட்ட குடும்பங்களின் மீள்குடியமர்த்துவதற்காக காணி வழங்குதல் மற்றும் வீடுகளை நிர்மாணிப்பதற்கான நிதி உதவி வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

07

# ஜெய்சங்கர்-ரில்வின் சந்திப்பு

கொழும்பு, பெப். 07

இந்தியாவுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள ஜே.வி.பியின் செயலாளர் ரில்வின் சில்வா, அந்நாட்டு வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கரை நேற்று சந்தித்து கலந்துரையாடினார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான அரசியல், பொருளாதார மற்றும் கலாசார உறவுகளை

07

# நீதிமன்ற விசாரணையை கோட்டாபய புறக்கணிப்பதை எதிர்த்து போராட்டம்!

யாழ்ப்பாணம், பெப். 07

யாழ்ப்பாணத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட லலித்குமார் வீரராஜ் மற்றும் குகன் முருகானந்தன் ஆகியோர் தொடர்பிலான

07




# சுகாதாரத்துறை குறைபாடு காரணமாக நோயாளிகளின் உயிருக்கு அச்சுறுத்தல்!

## மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை

கொழும்பு, பெப். 07

நாட்டின் சுகாதாரத் துறையில் நிலவும் பாரிய குறைபாடுகள் காரணமாக நோயாளிகளின் உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில், சங்கத்தின் பிரதிநிதிகள் அரசாங்கத்துக்கும் சுகாதார அதிகாரிகளுக்கும் கோரிக்கைகளை முன்வைத்தனர்.

வைத்தியர்கள் மற்றும் விசேட வைத்திய நிபுணர்களுக்கான மனிதவள உரிமைகளை உறுதிப்படுத்துவதில் அரசாங்கம்

07

# அவசரகால சட்டம் நீடிப்புக்கு பின்னால் அரசியல் நோக்கம்!

## ஐக்கிய மக்கள் சக்தி குற்றச்சாட்டு

கொழும்பு, பெப். 07

அரசாங்கம் அவசரகாலச் சட்டத்தை நீடிப்பதற்குப் பின்னால் அரசியல் நோக்கம் இருப்பதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றில் நேற்று உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

டித்வா புயல் ஏற்பட்டு 6 வாரங்கள்

07

# அவசரகால சட்டம் நீடிப்பு!

கொழும்பு, பெப். 07

பொது அவசரகால நிலையைப் பிரகடனப்படுத்துவது தொடர்பான தீர்மானம் 104 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.

குறித்த தீர்மானத்திற்கு ஆதரவாக 106 வாக்குகளும், எதிராக 02 வாக்குகளும் மாத்திரமே அளிக்கப்பட்டன.

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் இலங்கை தமிழரசு கட்சி உள்ளிட்ட ஏனைய எதிர்க்கட்சிகள் வாக்களிப்பில் பங்கேற்கவில்லை.

(அ)

# எமது நெல்லை எங்கள் மாகாணத்திலேயே அரிசியாக்கி விநியோகிக்க நடவடிக்கை!

## வடக்கு மாகாண ஆளுநர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், பெப். 07

வடக்கு மாகாணத்தில் உற்பத்தியாகும் நெல், வேறு மாகாணங்களுக்குக் கொண்டு செல்லப்பட்டு, அங்கிருந்து அரிசியாக மாற்றப்பட்டு மீண்டும் எமது மாகாணத்துக்கே விற்பனைக்கு வருகின்றது. இதனால் எமது விவசாயிகளும், நுகர்வோரும் பாதிக் கப்படுகின்றனர். இந்நிலையை மாற்றியமைத்து, எமது நெல்லை எமது மாகாணத்திலேயே அரிசியாக்கி விநியோகிப்பதற்குத் தனியார் மற்றும்

07

# 2027ஆம் ஆண்டு சம்பள உயர்வு வரும்வரை எந்தவொரு கொடுப்பனவும் அதிகரிக்காது!

## ஜனாதிபதி அநுரகுமார கூறுகிறார்



கொழும்பு, பெப். 07

எதிர்வரும் 2027 ஆம் ஆண்டு சம்பள உயர்வு வரும் வரை, வேறு எந்தவொரு கொடுப்பனவும் அதிகரிக்கப்படமாட்டாது என ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.

டித்வா புயலினால் ஏற்பட்ட அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களை மீள்குடியேற்றும் கண்டி மாவட்ட வேலைத்திட்டத்தில் கலந்துகொண்டு

07

# கட்டுநாயக்கவில் போதைப்பொருளுடன் மானிப்பாயைச் சேர்ந்த வர்த்தகர் கைது!

கொழும்பு, பெப். 07

கட்டுநாயக்க விமான நிலையம் ஊடாக சுமார் 2 கோடி ரூபாய்க்கும் அதிகபெறுமதியுடைய போதைப் பொருளை கடத்தி வந்த மானிப்பாயைச் சேர்ந்த பிரபல வர்த்தகர் ஒருவர் விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட நபரிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில், குறித்த போதைப்பொருளை வாங்கி செல்வதற்காக நீர்கொழும்பில் உள்ள பிரபல நட்சத்திர

07

# மோட்டார் சைக்கிள் விபத்தில் வவுனியா மாணவன் மரணம்!

வவுனியா, பெப். 07

வவுனியா- வாரிக்குட்டியூர் பகுதியில் மோட்டார் சைக்கிள் விபத்துக்குள்ளானதில் மாணவன் ஒருவர் உயிரிழந்துள்ளதாக பூவரசன்குளம் பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா, வாரிக்குட்டியூர் பகுதியில் மோட்டார் சைக்கிளில் நேற்று முன் தினம் இரு மாணவர்கள் பயணித்தபோது மோட்டார் சைக்கிள் கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளானதில் அதில் பயணித்த ஒரு மாணவன் மரணமடைந்தார்.

இவ் விபத்தில் வாரிக்குட்டியூர் பகுதியைச்

07

# மாகாண தேர்தல் திட்டமிட்டு தாமதப்படுத்துகின்றது அரசு!

## சாணக்கியன் எம்.பி. குற்றச்சாட்டு

கொழும்பு, பெப். 07

மாகாண சபை தேர்தலை அரசாங்கம் திட்டமிட்டு தாமதப்படுத்தி வருவதாக பாராளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் குற்றம்சாட்டியுள்ளார்.

07





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரஷ்யாவில் உயர்தரம் முடித்த மாணவனுக்கு இலங்கை பல்கலையில் மருத்துவபீட உரிமை

## உயர்நீதிமன்றம் தீர்ப்பு

கொழும்பு, பெப். 07

ரஷ்யாவில் உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்து இலங்கையில் மருத்துவ பீடத்துக்குத் தெரிவாகுவதற்கான தகுதியைப் பெற்றிருந்த இலங்கை மாணவன் ஒருவரை, உள்நாட்டு மருத்துவ பீடத்தில் இணைத்துக்கொள்வதை மறுத்ததன் ஊடாக அவரது அடிப்படை மனித உரிமை மீறப்பட்டுள்ளதாக உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

அத்துடன், குறித்த மாணவனை உடனடியாக இலங்கைப் பல்கலைக்கழகம் ஒன்றின் மருத்துவ பீடத்தில் இணைத்துக் கொள்ளுமாறு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு நீதிமன்றம் நேற்று முன் தினம் உத்தரவிட்டுள்ளது.

பொரளையைச் சேர்ந்த இசுல தம்சித் ஜயரத்ன என்ற மாணவரே இந்த மனுவைத் தாக்கல் செய்திருந்தார்.

மனுவை விசாரணை செய்த பின்னர், நீதியரசர்களான ஜனக் டி சில்வா மற்றும் சோபித ராஜகருணா ஆகியோரின் இணக்கப்பாட்டுடன், உயர் நீதிமன்ற நீதியரசர் அர்ஜுன ஒபேசேகர இத்தீர்ப்பை அறிவித்தார்.

தான் கொழும்பிலுள்ள முன்னணி பாடசாலையொன்றில் க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடைந்ததாக மனுதாரர் குறிப்பிட்டுள்ளார்.

தனது தந்தை இலங்கை விமானப்படையின் குரூப் கப்டனாக கடமையாற்றியபோது, ரஷ்யாவிலுள்ள இலங்கைத் தூதரகத்தில் பாதுகாப்பு ஆலோசகர் பதவி கிடைத்ததை அடுத்து தான் ரஷ்யாவுக்குச் சென்றதாக அவர் தெரிவித்தார்.

அங்கு இந்திய, பாகிஸ்தான் மற்றும் பங்களாதேஷ் மாணவர்கள் கல்வி பயிலும் பாடசாலையில் "சிரேஷ்ட பாடசாலை சான்றிதழ் பரீட்சையில் "சித்தியடைந்ததாகவும், அது இலங்கையின் க.பொ.த உயர்தரப் பரீட்சைக்குச் சமமானது எனவும் மனுதாரர் சுட்டிக்காட்டினார்.

அதன் பின்னர், வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு ஊடாக இலங்கையிலுள்ள அரச பல்கலைக்கழகங்களின் மருத்துவ பீடத்தில் அனுமதி பெறுவதற்காக விண்ணப்பித்தபோதிலும், அதற்கான நிபந்தனைகளுக்குத் தான் பொருந்தவில்லை எனக் கூறி வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு தனது விண்ணப்பத்தை நிராகரித்ததாக அவர் குற்றம் சுமத்தியிருந்தார்.

இதன் மூலம் தனது அடிப்படை மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளதாக அவர் மனுவில் குறிப்பிட்டிருந்தார்.

முன்வைக்கப்பட்ட சமர்ப்பணங்களை ஆராய்ந்த நீதியரசர், அரச பல்கலைக்கழகமொன்றின் வைத்திய பீடத்தில் அனுமதி பெறுவதற்கான உரிய நிபந்தனைகளின் கீழ் மனுதாரர் தகுதி பெற்றுள்ளதாகத் தீர்ப்பளித்தார்.

இவ்விடயத்தில் தலையிடுவதற்கு வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சுக்கு அதிகாரம் இல்லை எனச் சுட்டிக்காட்டிய நீதியரசர், மனுதாரரின் விண்ணப்பத்தை நிராகரிக்க அந்த அமைச்சு எடுத்த தீர்மானம் சட்டத்திற்கு முரணானது எனவும் குறிப்பிட்டார்.(அ)



# நெல் கொள்வனவுக்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தி

## அமைச்சர் அரவிந்த செனரத்

கொழும்பு, பெப். 07

அரசாங்கத்தினால் நெல் கொள்வனவு செய்வதற்கான அனைத்து ஏற்பாடுகளும் தற்போது பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக காணி மற்றும் நீர்ப்பாசன பிரதி அமைச்சர் அரவிந்த செனரத் தெரிவித்துள்ளார்.

நேற்று பாராளுமன்றத்தில் உரையாற்றிய போதே பிரதி அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

தற்போது பல மாவட்டங்களில் நெல் களஞ்சியசாலைகள் திறக்கப்பட்டுள்ளதாகவும், அறுவடை கிடைக்கப் பெறும் அளவைப் பொறுத்து அடுத்தகட்ட நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அத்துடன், கடந்த போகத்தில் கொள்வனவு செய்யப்பட்ட நெல் இருப்புகளை முறையாக அரிசியாக மாற்றி சந்தைக்கு விடுவிக்கும் பணிகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் பிரதி அமைச்சர் சுட்டிக் காட்டினார்.

இன்று பல மாவட்டங்களில் நெல் களஞ்சியசாலைகளைத் திறந்து, அறுவடை வரும் அளவைக் கண்காணித்து நாங்கள் திட்டமிட்டுள்ளோம். அதே போல் கடந்த காலங்களில் கொள்வனவு செய்த நெல்லை அரிசியாக மாற்றி சந்தைக்கு வெளியிடும் வேலைத்திட்டத்தையும் ஆரம்பித்துள்ளோம். நெல் கொள்வனவு செயல் முறைகளை நாங்கள் தொடங்கியுள்ளோம். களஞ்சிய வசதிகள் தயார் செய்யப்பட்டுள்ளன. எனவே வருங்காலத்தில் எமக்கு எந்தப் பிரச்னையும் இருக்காது எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

(அ)

# பிரதி பொலிஸ்மா அதிபர் கடமைகளை பொறுப்பேற்றார்

கிளிநொச்சி, பெப். 07

கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களுக்கான பிரதிப் பொலிஸ் மாஅதிபராக எம்.என்.எஸ்.மெண்டிஸ் தனது கடமைகளை நேற்று பொறுப்பேற்றுக் கொண்டார்.

சர்வமத வழிபாட்டைத் தொடர்ந்து இரணைமடுவில் உள்ள பிரதிப் பொலிஸ் மாஅதிபர் அலுவலகத்தில் கடமைகளை பொறுப்பேற்றார்.

எம்.என்.எஸ்.மெண்டிஸ் முன்னர் மேல் மாகாணத்தின் போக்குவரத்துக்கு பொறுப்பாக கடமையாற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# சுதுமலை அம்மன் கோவிலைச் சூழவுள்ள பகுதி புகையிலை பாவனை தவிர்க்கப்பட்ட பிரதேசம்!

யாழ்ப்பாணம், பெப். 07

சுதுமலை அம்மன் கோவிலைச் சூழ உள்ள பிரதேசம் புகையிலை பாவனை தவிர்க்கப்பட்ட பிரதேசமாக பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.

சுதுமலை பொதுச் சுகாதார பரிசோதகர் ம.ஜெயபிரதீப்பின் ஏற்பாட்டில் சுதுமலை அம்மன் ஆலய வளாகமும் அதனைச் சூழ உள்ள பிரதேசமும் புகையிலை தவிர்க்கப்பட்ட பிரதேசமாக உருவாக்கப்பட்டுள்ளது.




இதற்கு மானிப்பாய் பரிஸ் அரிமா கழகத்தினர் அனுசரணை வழங்கியிருந்தனர். இதில் கிராம சேவையாளர், சுதுமலை சிந்மய பாரதி வித்தியாசாலை மாணவர்கள், பொது மக்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (அ)

# உயர்நீதிமன்றத் தீர்மானங்கள் நாட்டின் நீதியை பிரதிபலிக்கும் கண்ணாடியாகும்

## பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய



கொழும்பு, பெப். 07

உயர் நீதிமன்றத்தில் வழங்கப்படும் தீர்ப்புக்களும் தீர்மானங்களும், நாட்டின் நீதியின் தன்மை, ஜனநாயகம் மற்றும் சட்டத்தின் ஆதிக்கம் ஆகியவற்றை நேர்த்தியாகப் பிரதிபலிக்கும் கண்ணாடியாகும் எனப் பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

சீன அரசாங்கத்தின் நிதியுதவியுடன் நவீனமயமாக்கப்பட்ட உயர் நீதிமன்றக் கட்டடத் தொகுதியை நீதித்துறை நடவடிக்கைகளுக்காக மீண்டும் கையளிக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே பிரதமர் இதனை குறிப்பிட்டார்.

சீன மக்கள் குடியரசின் வர்த்தக அமைச்சு, இலங்கை நீதி அமைச்சு மற்றும் சீன சர்வதேச ஒத்துழைப்பு முகவர் நிறுவனம் ஆகியவற்றிற்கு இடையே எட்டப்பட்ட உடன்படிக்கையின் அடிப்படையில் இப்புனரமைப்புப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

மேல்நீதிமன்றத்தின் மூலத் தோற்றம் மற்றும் கட்டமைப்பை மாற்றாது, நவீன தொழில்நுட்பத்துடன் ஒன்பது, ஏழு, ஐந்து மற்றும் மூன்று நீதியரசர்களைக் கொண்ட அமர்வுகளுக்கான 07 புதிய உயர் நீதிமன்ற நீதியறைகள் அமைக்கப்பட்டுள்ளன.

அத்துடன் நீதியரசர்களுக்கான 20 புதிய உத்தியோகபூர்வ அறைகள் மற்றும் பணியாளர் வசதிகள், மின்தூக்கிகள், நவீன நூலகம், வழக்கு ஆவண அறை மற்றும் கேட்போர் கூடம் என்பனவும், அனைத்து இடங்களையும் உள்ளடக்கும் வகையில் தானியங்கி கமெரா கட்டமைப்புடன் கூடிய அதிநவீன கட்டுப்பாட்டு அறை உள்ளிட்ட நவீன வசதிகளுடன் இக்கட்டடத் தொகுதி புனரமைக்கப்பட்டுள்ளது.

அங்கு மேலும் கருத்து தெரிவித்த பிரதமர்-

1988ஆம் ஆண்டு சீன அரசாங்கத்தின் ஒத்துழைப்புடன் நிர்மாணிக்கப்பட்ட இக்கட்டடத் தொகுதி, மூன்று தசாப்தங்களின் பின்னர் காலத்தின் தேவைக்கேற்ப இவ்வாறு நவீனமயமாக்கப்படுவது மிக முக்கியமானதொரு நடவடிக்கையாகும்.

நீதித்துறை உட்கட்டமைப்பு வசதிகளுக்காக மேற்கொள்ளப்படும் முதலீடு என்பது உண்மையில் பொதுமக்களின் நம்பிக்கையிற்காகச் செய்யப்படும் முதலீடாகும். பாதுகாப்பான மற்றும் வினைத்திறனான சூழல் மூலம் நீதிமன்றத்தின் சுயாதீனத் தன்மை மற்றும் கௌரவம் மேலும் வலுவடையும்-என்றார். (அ)

# அனுஷ பெல்பிட்டவுக்கு மீண்டும் விளக்கமறியல்

கொழும்பு, பெப். 07

சட்டவிரோதமான முறையில் சொத்துக்களை ஈட்டியமை தொடர்பில் சந்தேகத்தின் பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் அமைச்சின் செயலாளர் அனுஷ பெல்பிட்டவை, எதிர்வரும் 20ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு நீதவான் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது. கையூட்டல் ஒழிப்பு ஆணைக்குழு மற்றும் சந்தேகநபர் சார்பாக முன்னிலையான சட்டத்தரணிகள் முன்வைத்த விடயங்களை பரிசீலித்த பின்னரே நீதிமன்றம் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது. (அ)

# இலங்கையில் சிறுவர் மூலம் யாசகம் பெறுவது அதிகரிப்பு

கொழும்பு, பெப். 07

சிறுவர்களை யாசகம் எடுக்க கட்டாயப்படுத்தப்படுவது தொடர்பான முறைப்பாடுகள் அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை தரவு அறிக்கைகள் இதனை தெரிவித்துள்ளன.

இதன்படி, சிறுவர்கள் யாசகம் எடுக்க கட்டாயப்படுத்தப்படுவது தொடர்பாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை சபைக்கு கடந்த ஆண்டு முதல் 287 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. 2024 ஆம் ஆண்டில், சிறுவர்கள் யாசகம் எடுப்பது தொடர்பாக அதிகார சபைக்கு 237 முறைப்பாடுகள் கிடைத்திருந்தன.

இந்த விடயம் குறித்து பேசிய மகளிர் மற்றும் சிறுவர்கள் விவகார பிரதி அமைச்சர் நாமல் சுதர்சன, கடந்த காலங்களில் சிறுவர்கள் தொடர்பான சட்டத்தை அமல்படுத்துவதில் சிக்கல்கள் இருந்ததாகத் தெரிவித்துள்ளார்.

இந்த விடயங்கள் தற்போது மீட்டெடுக்கப்பட்டு வருவதாகவும், இந்த விடயத்தில் பணிபுரியும் அதிகாரிகளின் பற்றாக்குறை இருப்பதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

இதற்கான ஆட்சேர்ப்பு நடவடிக்கைகள் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் என்றும் பிரதி அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
07.02.2026 சனிக்கிழமை
விசுவாவசு வருடம், தை 24

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
– யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

# அரசியல் யாப்பு நிபுணர்கள்?

நிறைவேற்று ஜனாதிபதி முறைமை முற்றாக நீக்கப்படவேண்டும் என்று கலாநிதி ஜயம்பதி விக்கிரமரத்ன தெரிவித்திருக்கின்றார். அரசியல் மறுசீரமைப்பு தொடர்பான நிகழ்வில் பேசுகின்றபோதே இந்தக் கருத்தை அவர் வலியுறுத்தியிருக்கின்றார். இவ்வாறு காலத்திற்கு காலம் நிபுணர்கள் ஒன்றுகூடி, புதிய அரசியல் மறுசீரமைப்பு தொடர்பில் பேசுவதும், பின்னர் அரசியல் நிலைமைகள் மாறியதும் இவ்வாறான நிபுணர்கள் என்போர் காணாமல் போவதும் பல்வேறு சந்தர்ப்பங்களில் பதிவாகியிருக்கின்றது.

மைத்திரிபால சிறிசேன ஆட்சியில் ரணில் விக்கிரமசிங்கவின் ஆலோசகராக செயற்பட்ட ஜயம்பதி, புதிய அரசியல் யாப்பு தொடர்பான ஆலோசகராகவும்

செயற்பட்டிருந்தார். இதற்காகவே தேசிய பட்டியல் மூலம் பாராளுமன்ற உறுப்பினராக்கப்பட்டார். இந்தக் காலத்தில் புதிய அரசியல் யாப்பு முயற்சிகள் வெற்றியளிக்கப்போவதில்லை என்பதை நன்கு தெரிந்திருந்தும், அரசியல் வாதிகளின் நிகழ்ச்சி நிரலுக்கு முண்டு கொடுத்தார். இறுதியில் அந்த முயற்சி தோல்வியுற்றபோது அமைதியாக விலகிக் கொண்டார். ஆனால் இன்றுவரையில் அந்த முயற்சி ஏன் தோல்வியுற்றது என்பதற்கான காரணங்களை பொது வெளியில் அவர்

பேசியதில்லை. அப்போது தோல்வியடைந்தமைக்கான காரணங்கள் இப்போதும் இருக்கின்றதா அல்லது இல்லையா - இல்லையென்றால் எந்த அடிப்படையில் - இந்தக் கேள்விகளிலிருந்துதான் நிபுணர்கள் தங்களின் உரையாடலையே ஆரம்பிக்க வேண்டும். நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை நீக்கப்போவதான வாக்குறுதியுடன் சந்திரிகா குமாரதுங்க ஆட்சிபீடமேறினார். ஆனால் அது நடைபெறவில்லை. ஆனால் சந்திரிகா ஒற்றையாட்சிக்கு மாற்றான புதிய அரசியல் யாப்பு ஒன்றைக் கொண்டுவரும் முயற்சில் ஈடுபட்டார் என்பது உண்மை. ஆனால் ரணில் விக்கிரமசிங்க அதற்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்கவில்லை. விடுதலைப் புலிகள் அமைப்பும் அதனை எதிர்த்திருந்த நிலையில் அந்த முயற்சி முளையிலேயே கருகிப் போனது. புதிய அரசியல் யாப்பு தொடர்பான நிகழ்வுகளில் பங்குகொள்ளும் தமிழ் சட்ட நிபுணர்கள் என்போர் இது பற்றிப் பேசுவதில்லை.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவும் ஜனாதிபதி முறைமையை நீக்கும் வாக்குறுதியை வழங்கியிருக்கிறார்தான். ஆனால் தேர்தல் கால வாக்குறுதிகளை முழுமையாக நிறைவேற்றும் அரசியல் கலாசாரம் இலங்கையில் எப்போதாவது இருந்தது உண்டா? - அதேவேளை, தேர்தல் கால வாக்குறுதிகளை நிறைவேற்றாதபோது மக்களும் அதனைப் பற்றி பெரிதுபடுத்துவதில்லை. தேர்தல் என்றால் அப்படித்தான் என்பதே சாதாரண மக்களின் புரிதலாக இருக்கின்றது. ஏனெனில் தேர்தல் கால வாக்குறுதிகளின் அடிப்படையில் மக்கள் அரசியல்வாதிகளை நிராகரிப்பது என்றால் இலங்கையில் எந்தவொரு கட்சியும் ஆட்சியில் இருக்க முடியாது. தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் புதிய அரசியல் யாப்பு ஒன்றை நோக்கிச் செல்வதற்கான வாய்ப்பு மிகவும் குறைவு - அப்படியே சென்றாலும் கூட, முன்னரைப் போல் அதுவும் வெற்றி பெறாத முயற்சியாகவே முடிவுறும். உதாரணமாக நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை ஒன்றுதான் ஆட்சியாளருக்கான அரசியல் பிடிமானமாக இருக்கின்றது.

இந்த நிலையில் ஒரு வேளை ஜனாதிபதி முறைமை நீக்கப்பட்ட பின்னர், பாராளுமன்றத்தில் தேசிய மக்கள் சக்தி பலமாக இருப்பதற்கான வாய்ப்பு இல்லாமல் போனால் என்ன நடக்கும்? நிலைமை சிக்கலாகும். பாராளுமன்றத்தில் ஒரு கட்சி பலமில்லாதபோது, எந்தவொரு கட்சியாலும் ஆதிக்கம் செலுத்த முடியாமல் போய்விடும். தற்போதுள்ள அரசியல் சூழலில் ஜே.வி.பி தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அவ்வாறான ஆபத்தான தெரிவை மேற்கொள்வதற்கான வாய்ப்பு மிகவும் குறைவு. சட்டக் கண்ணாடியை மட்டும் போட்டுப் பார்த்தால் சில விடயங்கள் பேசுவதற்கு நன்றாக இருக்கலாம் ஆனால் அரசியல் யதார்த்தமோ வேறு.

# ரி - 20 உலகக்கிண்ண தொடர் இன்று; கொழும்பில் விசேட போக்குரத்து திட்டம்

கொழும்பு, பெப். 07

இருபது - 20 உலகக்கிண்ணக் கிரிக்கெட் தொடர் இன்று ஆரம்பமாகி எதிர்வரும் மார்ச் 8 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. இந்த நிலையில், கொழும்பு ஆர்.பிரேமதாஸ, எஸ்.எஸ்.சி மைதானங்களைச் சுற்றி விசேட பாதுகாப்பு, போக்குவரத்து ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதற்காக 1,500 பொலிஸ் அதிகாரிகளும் 600 போக்குவரத்து பொலிஸ் அதிகாரிகளும் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். அத்துடன், மைதானத்தினுள் பெரிய பைகள், கண்ணாடி போத்தல்கள், ட்ரோன்கள், கூர்மையான பொருட்கள் மற்றும் போதைப்பொருட்கள் கொண்டு செல்லத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

ஆர்.பிரேமதாச மைதானத் தின் அருகே வின்சென்ட் பெரேரா மாவத்தை (கிராண்ட் பாஸ் வீதி) ஊடாக பபாபுள்ளே பால சந்தியில் இருந்து பபாபுள்ளே பகுதிக்குள் நுழைதல் மற்றும் பபாபுள்ளே பாலத்திலிருந்து மைதானம் நோக்கி வருதல் ஆகியவற்றுக்குக் கட்டுப்பாடு விதிக்கப்படவுள்ளது.

இதேநேரம், செபஸ்தியன் கால்வாய் வீதிக்கு அருகிலுள்ள மல்வத்தை பாலம் மற்றும் 100 அடி வீதி - விகாரை வீதிச் சந்தி ஆகியவற்றின் ஊடாக மைதானம் நோக்கி பயணிக்க தடை விதிக்கப்படவுள்ளது.

மேலும், மைதானத்தின் அருகிலுள்ள மாளிகாவத்தை வீதி பக்கவாட்டு வீதி மற்றும் சத்தர்ம மாவத்தை - கெத்தா ராம வீதிச் சந்தி ஊடாக விகாரை வீதிக்குள் நுழைவதற்கும் கட்டுப்பாடுகள் விதிக்கப்படவுள்ளன.

அதேவேளை, எஸ்.எஸ்.சி மைதானத்தில் போட்டிகள் நடைபெறும் நாட்களில் பொது நிர்வாக அமைச்சு சந்தியிலிருந்து மெய்ட்லண்ட் பிளேஸ் செல்லும் நுழைவு பகுதி, வித்யா மாவத்தை சந்தியிலிருந்து மெய் ட்லண்ட் பிளேஸ் செல்லும் நுழைவு பகுதி மற்றும் விஜேராம சந்தியிலிருந்து வித்யா மாவத்தைக்கு நுழையும் பகுதி ஆகிய இடங்களில் போக்குவரத்துத் தடைகள் அல்லது கட்டுப்பாடுகள் விதிக்கப்படும்.

அத்துடன், பெப்ரவரி 8, 15 மற்றும் 19 ஆகிய திகதிகளில் நடைபெறவுள்ள விசேட போட்டிகளுக்காக பழைய பாதுகாப்பு அமைச்சு வளாகம் மற்றும் துறை முக நகர வாகன தரிப்பிடங்களிலிருந்து போக்குவரத்து வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

இதேநேரம், ஆர்.பிரேமதாஸ மைதானத்தில் பெப்ரவரி 11, 13, 21, 25 மற்றும் 27 ஆகிய திகதிகளில் நடைபெறவுள்ள போட்டிகளுக்காக விசேட வாகன தரிப்பிட வசதிகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

இதன்படி, மெட்டிபார்க் தரிப்பிடம், சதொச வளாகம், செபஸ்தியன் கால்வாய் பகுதி, கோவில் வீதி, எப்பள் வத்த மற்றும் 100 அடி வீதியைச் சூழவுள்ள பகுதிகளில் வாகனங்களை நிறுத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. போட்டி நாட்களின் போக்கு வரத்து நெரிசலைக் குறைப்பதற்காக இந்தப் பகுதிகளைப் பயன்படுத்துமாறு பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர்.

# மாணவர் ஒருவருக்கு 25,000 ரூபர் அரசு 192 கோடி ரூபா நிதி ஒதுக்கீடு

கொழும்பு, பெப். 07

“டித்வா” புயலினால் பாதிக்கப்பட்ட அனைத்து மாவட்டங்களையும் சேர்ந்த பாடசாலை மாணவர்களுக்காக, ஜனாதிபதி நிதியத்தினால் வழங்கப்படும் 10,000 ரூபா கொடுப்பனவை வழங்குவதற்காக ஜனாதிபதி நிதியம் 1,925,010,000.00 (சுமார் 192 கோடி) ரூபா நிதியை ஒதுக்கியுள்ளது.

ஜனாதிபதி ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில், குறித்த நிதி ஒதுக்கீடுகள் அனைத்தும் தற்போது அந்தந்த மாவட்ட செயலாளர்கள் ஊடாகப் பிரதேசச் செயலாளர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட மாவட்டங்களைச் சேர்ந்த பாடசாலை மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளைத் தொடர்வதற்காக, அரசாங்கத்தினால் ஒரு மாணவருக்கு மொத்தம் 25,000 ரூபா வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதில், திறைசேரியிலிருந்து 15,000 ரூபாவும் மற்றும் ஜனாதிபதி நிதியத்திலிருந்து 10,000 ரூபாவும் வழங்கப்படவுள்ளது. அதற்கமைய அம்பாறை, அம்பாந்தோட்டை, பொலன்னறுவை, மொனராகலை, மன்னார் மற்றும் வவுனியா ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த பாடசாலை மாணவர்களுக்காக, ஜனாதிபதி நிதியத்தினால் வழங்கப்படும் 10,000 ரூபா கொடுப்பனவு தற்போது முழுமையாகக் கொடுத்து முடிக்கப்பட்டுள்ளது.

ஏனைய மாவட்டங்களைச் சேர்ந்த பாடசாலை மாணவர்களுக்கான குறித்த நிதியுதவியும் விரைவில் வழங்கப்படவுள்ளதாக அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

(அ)

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**
பணப்புழக்கம் அதிகரிக்கும். நண்பர்கள் உறவினர்கள் மத்தியில் செல்வாக்கு உயரும். அரசால் அனுகூலம் உண்டு. எதிர்பார்த்த இடத்திலிருந்து நல்ல செய்தி வரும். வழக்குகள் சாதகமாக தீர்ப்பு வரும்.

**இடபம்**
குடும்ப வருமானத்தை உயர்த்த முற்படுவீர்கள். அக்கம்-பக்கம் வீட்டாரின் ஆதரவு பெருகும். நண்பர்கள் ஒத்தாசையாக இருப்பார்கள். புதியவர்கள் அறிமுகமாவார்கள். மனநிறைவு பெறும் நாள்.

**மிதுனம்**
முக்கிய பிரமுகர்களை சந்திப்பீர்கள். தாயாரின் உடல் நலத்தில் கவனம் தேவை. பணப்பற்றாக குறையை சமாளிப்பீர்கள். பயணங்களால் அலைச்சல் இருந்தாலும் புது அனுபவம் உண்டாகும்.

**கடகம்**
குடும்பத்தினருடன் சுபநிகழ்ச்சிகளில் கலந்துக் கொள்வீர்கள். அதிகாரப்பதவியில் இருப்பவர்களின் தொடர்பு கிடைக்கும். அரசால் ஆதாயம் உண்டு. வெற்றி பெறும் நாள்.

**சிம்மம்**
கணவன்-மனைவிக்குள் அன்யோன்யம் பிறக்கும். தள்ளிப் போன விஷயங்கள் உடனே முடியும். ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். வியாபாரத்தில் புது தொடர்பு கிடைக்கும். புதிய பாதை தெரியும் நாள்.

**கன்னி**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் முதலில் சந்தேகப் படுவதை நிறுத்துங்கள். குடும்பத்தாருடன் ஈகோ பிரச்சினைகள் வந்து நீங்கும். சாலைகளை கவனமாக கடந்துச் செல்லுங்கள்.

**துலாம்**
எளிதில் முடித்துவிடலாம் என நினைத்த காரியங்கள் கூட இழுபறியில் போய் முடியும். சிலர் உங்களை தாழ்த்தி பேசினாலும் கலங்காதீர்கள். சகோதரர்களை பகைத்து கொள்ளாதீர்கள்.

**விருட்சிகம்**
உங்களின் அணுகுமுறையை மற்றவர்களின் ரசனைக்கேற்ப மாற்றியமைத்து கொள்வீர்கள். உடன்பிறந்தவர்கள் பாசமழை திட்டங்கள் நிறைவேறும் நாள்.

**தனுசு**
மற்றவர்களால் செய்ய முடியாத செயற்கரிய காரியங்களையெல்லாம் முடித்துக் காட்டுவீர்கள். உறவினர் நண்பர்களால் ஆதாயமும் உண்டு. திடீர் சந்திப்புகள் நிகழும். சாதித்துக் காட்டும் நாள்.

**மகரம்**
உற்சாகமடைவீர்கள். குடும்பத்தில் இருந்து வந்த கூச்சல் குழப்பம் விலகும். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். சுப நிகழ்ச்சிகளில் கலந்துக் கொள்வீர்கள். தடைப்பட்ட வேலைகள் முடியும் நாள்.

**கும்பம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் வேலைச்சுமையால் பதற்றம் அதிகரிக்கும். யாரையும் தூக்கி எறிந்து பேசாதீர்கள். மற்றவர்களை முழுமையாக நம்பிக் கொண்டிருக்க வேண்டாம்.

**மீனம்**
தன்னம்பிக்கையுடன் எதையும் செய்யத் தொடங்குவீர்கள். மூத்த சகோதர வகையில் உதவிகள் கிடைக்கும். கல்யாணப் பேச்சுவார்த்தை சாதகமாக முடியும். வாகனத்தை சீர் செய்வீர்கள்.

# மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற “ஊராட்சி முற்றம்” கலந்துரையாடல்



யாழ்ப்பாணம், பெப். 07

யாழ்ப்பாணம் மாவட்ட செயலகம் மற்றும் வடமாகாண மகளிர் விவகார அமைச்சின் ஏற்பாட்டில் ஊராட்சி முற்றக்கூட்டம் கிறிசலிஸ் நிறுவனத்தின் அனுசரணையுடன் நேற்று முன்தினம் அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் மற்றும் வடமாகாண மகளிர் விவகார அமைச்சின் உதவிச் செயலாளர் திருமதி எஸ். லதுமீரா ஆகியோரது இணைத் தலைமையில் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் தொடக்கவுரையாற்றிய அரசாங்க அதிபர் கூறுகையில், கிராம மட்டத்தில் அடையாளம் காணப்படும் தீர்க்கமுடியாத பிரச்னைகளுக்கு ஆலோசனை வழங்கும் வகையில் இக் கலந்துரையாடல்கள் அமைவதாகவும், மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற ஊராட்சி முற்றம் கூட்டத்தில் சாவகச்சேரி சுகாதார மருத்துவமனை அதிகாரி பணிமனையில் இடவசதி போதாமையால் குறித்த கட்டடத்தை விரிவாக்கம் தொடர்பான கோரிக்கை முன்வைக்கப்பட்டு அதன் தொடர்ச்சியான நடவடிக்கை எடுக்கப்பட்டதற்கு அமைய, நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு கட்டடம் விரிவாக்கப்பட்டதை அரசாங்க அதிபர் குறிப்பிட்டு, இக் கலந்துரையாடல் ஆரோக்கியமான கலந்துரையாடலாக அமைய வேண்டும் எனவும் தெரிவித்தார்.

இந்தக் கூட்டத்தில் யாழ்ப்பாணம் மாநகர முதல்வர் மதிவதனி விவேகானந்தராஜா, மேலதிக அரசாங்க அதிபர் கே. சிவகரன், உதவி மாவட்ட செயலாளர் உ. தர்சினி மற்றும் குடிசார் அமைப்புகளின் சம்மேளன தலைவர் திருமதி ம. தமிழ்செல்வி ஆகியோர் பங்குபற்றினர்.

மேலும், மக்கள் எதிர்நோக்கும் பல்துறைசார் பிரச்னைகள் மற்றும் அவர்களின் தேவைப்பாடுகள் தொடர்பில் ஊராட்சி முற்றத்தில் கலந்துரையாடி தீர்வு வழங்குவதை நோக்காக கொண்டு இந்தக் கூட்டம் நடத்தப்பட்டது.

இதில் ஊராட்சி முற்ற கூட்டத்தின் நோக்கம்,

மாவட்ட அளவில் தீர்க்கப்பட முடியாத பிரச்னைகளாக அடையாளம் காணப்பட்ட சிறுவர், பெண்கள் நலன் மற்றும் குழுக்கள், பாதுகாப்பு, கல்வி, விவசாயம், பெண்கள் சிறு சிறு கைத்தொழில் உற்பத்தி உள்ளிட்ட பல காத்திரமான விடயத் தலைப்புகள் முன்வைக்கப்பட்டு விவாதிக்கப்பட்டதுடன், மாவட்ட ரீதியில் குடிசார் அமைப்புகளின் சம்மேளனத்தால் முன்னெடுக்கப்படவுள்ள பரிந்துரைகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டன. (எ)

# “ஒருங்கிணைக்க வேண்டிய தேசிய கொடி இனங்களிடையே பிரிவினையை தூண்டியது”

யாழ்ப்பாணம், பெப். 07

இலங்கை சுதந்திரம் அடைந்தபோது விக்கிரமராசசிங்க மன்னனின் சிங்கக் கொடியே தேசியக் கொடியாக ஏற்றப்பட்டது. சிங்கள மக்களை மட்டுமே பிரதிநிதித்துவம் செய்த இந்தக் கொடியைத் தமிழ் - முஸ்லிம் தலைவர்கள் ஆட்சேபித்ததால் கொடியின் ஓரத்தில் தமிழ் மக்களைக் குறிக்கச் செம்மஞ்சள் நிறப் பட்டியும் முஸ்லிம் மக்களைக் குறிக்கப் பச்சைநிறப் பட்டியும் சேர்க்கப்பட்டன.

ஆனால், சிங்கள மக்களைக் குறிக்கும் சிவப்பு வர்ணமே கொடியில் பெரும்பங்கு இடம் பெற்றது. பௌத்தக் குறியீடுகளும் இடம்பெற்றன. மூவின மக்களுக்கும் சமமான பிரதிநிதித்துவம் இல்லாது சிங்கள மக்களுக்கான கொடியாகவே தேசியக்கொடி வடிவமைக்கப்பட்டது. இதனால், இனங்களை ஒருங்கிணைப்பதற்குப் பயன்படவேண்டிய தேசியக் கொடி இனங்களுக்கிடையில் பிரிவினையை ஏற்படுத்தியதன் தொடக்கமாக அமைந்தது என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கையின் சுதந்திர தினமான கடந்த 4ஆம் திகதி என்று தணியும் இந்த சுதந்திர தாகம்“ என்ற கருப்பொருளில் யாழ்ப்பாணம் வை.எம்.சி.ஏ மண்டபத்தில் தமிழ்த் தேசியப் பேரவையின் கருத்தமர்வு நடைபெற்றது. தமிழ்த் தேசியக் கட்சியின் ஏற்பாட்டில் நடை பெற்ற இந்தக்கூட்டத்தில் உரை யாற்றிய போதே ஐங்கரநேசன் மேற்கண்டவாறு சுட்டிக்காட்டியுள்ளார்.

# யாழில் மணல் கடத்தலில் ஈடுபட்ட முன்னாள் பொலிஸ் அலுவலர் கைது!

யாழ்ப்பாணம், பெப். 07

யாழ்ப்பாணத்தில் சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் முன்னாள் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பருத்தித்துறை பகுதியில் மணல் ஏற்றி சென்ற டிப்பர் வாகனத்தை பொலிஸார் வழி

மறித்தபோது, பொலிஸாரின் கட்டளையை மீறி சாரதி டிப்பர் வாகனத்தை தொடர்ந்து செலுத்தியுள்ளார்.

அதனை அடுத்து பொலிஸார் டிப்பர் வாகனத்தை சுமார் 20 கிலோ மீற்றர் தூரம் துரத்தி சென்ற நிலையில் சாரதி டிப்பர் வாகனத்தை மணலுடன் வீதியில்நிறுத்தி விட்டு வாகனத்தில் இருந்து இறங்கி ஓடியுள்ளார்.

தப்பியோடிய சாரதியை பொலிஸார் துரத்தி சென்று கைது செய்தனர்.

கைது செய்த சாரதியை பொலிஸார் விசாரித்தவேளை , குறித்த நபர் முன்னாள் பொலிஸ் உத்தியோகத்தர் எனவும்,

சட்டவிரோத செயற்பாடுகளில் ஈடுபட்ட குற்றத்தில் பொலிஸ் சேவையில் இருந்து இடை நிறுத்தப்பட் டவர் எனவும்தெரியவந் துள்ளது.

மேலதிக விசாரணைகளில் பொலிஸ் உத்தியோகத்தில் இருந்தவேளை பொலிஸாருடன் இருந்த நெருக்கத்தை பயன்படுத்தி சட்டவிரோத மணல் கடத்தல் போன்றசெயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றமை தெரியவந்துள்ளது.

குறித்த நபரை தொடர்ந்து பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

# மன்னார் மாவட்ட செயலகத்துக்கு விருது

கொழும்பு, பெப். 07

இலங்கை பொது நிதி கணக்காளர்கள் சங்கம் மற்றும் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் பொதுத்துறை பிரிவு இணைந்து ஏற்பாடு செய்த சிறந்த வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் விருதுகள் 2025 வழங்கும் விழா, நேற்று முன்தினம் சிறிமாவோ பண்டாரநாயக்கா கண்காட்சி மண்டபத்தில் நடைபெற்றது.

பொதுத்துறை நிறுவனங்களில் நிதி வெளிப்படைத்தன்மை, பொறுப்புணர்வு மற்றும் சிறந்த கணக்கியல் நடைமுறைகளை ஊக்குவிக்கும் நோக்குடன் இந்த விழா ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இவ்வருட விழாவில் மன்னார் மாவட்ட செயலகம், தனது வரலாற்றில் முதன்முறையாக விருதை பெற்றுக்கொண்டது. நிதி ஒழுங்கு, தர மான வருடாந்த அறிக்கை தயா ரிப்பு மற்றும் நல்லாட்சி நடை முறைகளுக்கான உறுதியை வெளிப் படுத்தும் முக்கியமான சாதனை யாகும். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறைத்து வைக்கப்பட்ட வெடிமருந்துகள் சிக்கின

கொழும்பு, பெப். 07

வீடொன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த வெடி மருந்துகளை குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகள் கண்டறிந்துள்ளனர்.

கொழும்பு கந்தானை - வீதி மாவத்தை பகுதியிலேயே இவை நேற்று முன்தினம் கண்டறியப்பட்டன.

களனி பிரிவு குற்றப் புலனாய்வு திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்ட விசேட சோதனையிலேயே இந்த வெடி மருந்துகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

டுபாயில் கைது செய்யப்பட்டு, அண்மையில் நாட்டுக்கு அழைத்து வரப்பட்ட சந்தேக நபர் ஒருவரை பொலிஸ் தடுப்பு காவலில் தடுத்துவைத்து விசாரணைக்கு உட்படுத்தியதில், இந்த விடயம் தெரியவந்துள்ளது.

இது தொடர்பான விசாரணைகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# 20 கோடி ரூபாய் பெறுமதியான போதைப்பொருளுடன் பெண் கைது

கொழும்பு, பெப். 07

சுமார் 20 கோடி ரூபாய் பெறுமதியான போதைப்பொருளை வீட்டில் மறைத்து வைத்திருந்த குற்றச்சாட்டில் பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு - பொரலஸ்கமுவ - நிர்மல மாவத்தை பகுதியில் பொலிஸார் நடத்திய சோதனையில் 17 கிலோ ஹஷீஸ் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டது.

கைப்பற்றப்பட்ட போதைப்பொருளின் பெறுமதி 20 கோடி ரூபாய்க்கும் அதிகம் என்றும் இந்தச் சம்பவத்தில் 31 வயது பெண் ஒருவர் கைது செய்யப்பட்டார் எனவும் தெரிவிக்கப்பட்டது.(ஐ)

சுதந்திர கட்சி பொது செயலர் விவகாரம்:

# தயாசிறி தொடுத்த வழக்கின் தீர்ப்பு ஒத்திவைக்கப்பட்டது

கொழும்பு, பெப். 07

சிறீ லங்கா சுதந்திர கட்சியின் பொதுச் செயலாளராக தடையின்றி செயல்பட அனுமதித்து உத்தரவிடக் கோரி பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தாக்கல் செய்த வழக்குக்கான தீர்ப்பை எதிர்வரும் 17ஆம் திகதி வரை ஒத்திவைக்குமாறு கொழும்பு மாவட்ட நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

இந்த வழக்குக்கான தீர்ப்பு நேற்று பிறப்பிக்கப்படவிருந்த நிலையில் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. சிறீ லங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளராக தன்னை அங்கீகரித்து கொழும்பு மாவட்ட நீதிமன்றம் முன்னர் உத்தரவுகளைப் பிறப்பித்ததாக தயாசிறி ஜயசேகர குறிப்பிட்டுள்ளார்.

அந்த உத்தரவுக்கமைய தடையின்றி அந்தப் பதவியில் செயல்பட அனுமதிக்க தேவையான உத்தரவுகளை பிறப்பிக்கக் கோரி அவர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# ரயில் சேவை நேற்று பாதிப்பு

கொழும்பு, பெப். 07

அலவ்வ, யட்டல்கொட பகுதியில் ரயில் ஒன்றில் ஏற்பட்ட தொழில்நுட்ப பிரச்யால் பிரதான ரயில் மார்க்கத்தில் சேவைகள் நேற்று பாதிக்கப்பட்டன.

பிரச்னை ஏற்பட்ட ரயிலை திருத்தம் செய்யும் பணிகளில் தொடருந்து திணைக்கள ஊழியர்கள் ஈடுபட்டனர். எனினும் நேற்று மதியம் வரை போக்குவரத்து வழமைக்கு திரும்பவில்லை.

டித்வா பேரிடர் பாதிப்பு:

# மாணவர்களுக்கான கொடுப்பனவுக்காக 192 கோடி ஒதுக்கியது ஜனாதிபதி நிதியம்

கொழும்பு, பெப். 07

டித்வா சூறாவளியால் பாதிக்கப்பட்ட அனைத்து மாவட்டங்களிலும் உள்ள பாடசாலை மாணவர்களுக்கு ஜனாதிபதி நிதியத்தால் வழங்கப்படும் 10 ஆயிரம் ரூபாய் கொடுப்பனவை வழங்குவதற்காக ஜனாதிபதி நிதியம் 192 கோடி ரூபாயை ஒதுக்கியிருந்தது. இதற்கான நிதி ஒதுக்கீடுகள் அனைத்தும் ஏற்கனவே, குறித்த மாவட்ட செயலாளர்கள் ஊடாக பிரதேச செயலாளர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் உள்ள பாடசாலை மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளை முன்னெடுத்து செல்வதற்காக, ஒவ்வொரு மாணவருக்கும் 25 ஆயிரம் ரூபாயை வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதுடன், அதில் 15 ஆயிரம் ரூபாய் திறைசேரியில் இருந்தும், 10 ஆயிரம் ரூபாய் ஜனாதிபதி நிதியத்தாலும் வழங்கப்படும்.

இதன்படி, மன்னார், வவுனியா, அம்பாறை, அம்பாந் தோட்டை, பொலநறுவை, மொனராகலை மாவட்டங் களை சேர்ந்த மாணவர்களுக்கு ஜனாதிபதி நிதியத்தால் வழங் கப்படும் 10 ஆயிரம் ரூபாய் கொடுப்பனவு முழுமையாக வழங்கப்பட்டுள்ளதுடன் ஏனைய மாவட்டங்களில் உள்ள பாடசாலை மாணவர்களுக்கும் குறித்த நிதி உதவியை விரைவில் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. (ஐ)

# புதிய அரசமைப்புக்கான உரையாடலை அரசாங்கம் உடன் ஆரம்பிக்க வேண்டும்

## எதிர்க்கட்சிகளின் எம். பிக்கள் வலியுறுத்து

கொழும்பு, பெப். 07

புதிய அரசமைப்பை வரைவதற்கான தேசிய அளவிலான கலந்துரையாடலை அரசாங்கம் உடனடியாக ஆரம்பித்து, அதில் தீவிரமாக பங்கேற்க வேண்டும் என்று பல அரசியல் கட்சிகளை பிரதிநிதித்துவப்படுத்தும் எதிர்க்கட்சிகளின் அரசியல்வாதிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

"வன் ரெக்ஸ் இனிரியேற்றிவ்" (One Text Initiative) அமைப்பால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த அரசமைப்பு சீர்திருத்தம் குறித்த விசேட கலந்துரையாடலில் பங்கேற்றபோதே எதிர்க்கட்சிகளின் பாராளுமன்ற உறுப்பினர்கள் மேற்கண்ட கோரிக்கையை முன்வைத்தனர்.

தயாசிறி ஜயசேகர எம். பி. கூறுகையில்,

"அரசாங்கம் தனது கொள்கைப் பிரகடனத்தில் உறுதியளித்த போதிலும், புதிய அரசமைப்பு குறித்த விவாதங்களை வேண்டுமென்றே தவிர்த்து வருகிறது. ஜே. வி. பி. அரசமைப்பு சீர்திருத்தம் குறித்து தனது உண்மையான நிலைப்பாட்டை எப்போதும் மறைத்தே வந்துள்ளது." - என்றார்.

ஹர்ஷ டி சில்வா எம். பி., "பெரும்பான்மைவாத அரசியல் அமைப்பில் சிறுபான்மையினரின் கருத்துகளையும் உள்ளடக்கிய ஓர் அரசமைப்பை உருவாக்க அரசாங்கத்தின் பங்களிப்பு அவசியம். கடந்த தேர்தல்களில் வாக்குறுதி அளித்த போதிலும், ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி தற்போது இதில் ஆர்வம் காட்டவில்லை"- என்று கூறினார்.

ரவி கருணாநாயக்க எம். பி. தெரிவிக்கையில், "வருங்கால சந்ததியினரின் நலனுக்காக ஒரு நிலையான அரசமைப்பு அவசியம். அதற்கு அரசாங்கத்தின் ஈடுபாடு மிக முக்கியமானது" - என்றார்.

முன்னாள் அமைச்சர் அநுர பிரியதர்ஷன யாப்பா, "ஆட்சியாளர்களுக்கும் மக்களுக்கும் இடையிலான இடைவெளியைக் குறைக்க புதிய அரசமைப்பு உதவ வேண்டும். அரசாங்கத்தின் பங்களிப்பு இன்றி அர்த்தமுள்ள சீர்திருத்தத்தை எட்ட முடியாது" என்றும் முன்னாள் அமைச்சர் உதய கம்மன்பில, "ஒற்றை அரசியல் கட்சியின் நலனுக்காக உருவாக்கப்படும் அரசமைப்பு ஒருபோதும் எவராலும் ஏற்றுக்கொள்ளப்படாது. சந்திரிகா, ரணில் மற்றும் கோட்டாபய ஆகியோரின் காலங்களில் தயாரிக்கப்பட்ட வரைவுகள் தோல்வியடைந்தமைக்கு இதுவே காரணம். அரசாங்கத்தின் சித்தாந்தம் முழு நாட்டினதும் சித்தாந்தமாக இருக்க முடியாது"- என்றார். (ஐ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழிலாளர்களுக்கு அநீதி இழைத்தால் நாம் அதனை வன்மையாக எதிர்ப்போம்

## தமிழ் முற்போக்கு கூட்டணி உறுதி

கொழும்பு, பெப். 07

தோட்டத் தொழிலாளர்களுக்கு அநீதி இழைக்கப்பட்டால் நாம் அதனை வன்மையாக எதிர்ப்போம் என்று தமிழ் முற்போக்குக் கூட்டணி தெரிவித்துள்ளது.

தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வு மற்றும் தற்போதைய பணிச்சுமை தொடர்பான விசேட ஊடகவியலாளர் சந்திப்பு தமிழ் முற்போக்குக் கூட்டணியால் நேற்று முன்தினம் கொழும்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதில், தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி. தெரிவிக்கையில்: "தோட்டத் தொழிலாளர்களுக்கு 400 ரூபாய் சம்பளம் உயர்த்தப்படும் என்ற வாக்குறுதியின் அடிப்படையிலேயே நாங்கள் வரவு- செலவுத் திட்டத்துக்கு ஆதரவாக வாக்களித்தோம். ஆனால், தற்போது கம்பனிக்காரர்கள் மேலதிகமாக கொழுந்து பறிக்குமாறு தொழிலாளர்களை வற்புறுத்துகின்றனர். மேலதிகமாக கொழுந்து பறித்தால் எப்படி சம்பள உயர்வு என்று கூற முடியும்? அரசாங்கம் உருப்படியான வேலைகளைச் செய்தால் நாங்கள் ஆதரவு வழங்குவோம், ஆனால் தொழிலாளர்களுக்கு அநீதி இழைக்கப்பட்டால் நாம் அதனை வன்மையாக எதிர்ப்போம்"- என்றார். (எ)

# மட்டு. வாகரை மீனவர்கள் கவனவீர்ப்பு போராட்டம்



மட்டக்களப்பு, பெப். 07

மட்டக்களப்பு மாவட்டத்தின் வாகரை பிரதேச மீனவர்கள், மட்டக்களப்பு கடற்றொழில் நீரியல்வள திணைக்களத்துக்கு முன்பாக கவனவீர்ப்பு போராட்டம் ஒன்றை நேற்று முன்தினம் முன்னெடுத்தனர்.

வாகரை பிரதேசத்தில் உள்ள மீனவர் அமைப்புகள் இணைந்து இந்த போராட்டத்தை முன்னெடுத்தனர்.

வாகரை பகுதியில் கரைவலை மீன்பிடியில் ஈடுபடுவோர், மட்டக்களப்பு கல்லடி பாலத்துக்கு அருகில் உள்ள வாவிக்கரை வீதியால் சென்று கடற்றொழில் நீரியல்வள திணைக்களத்துக்கு முன்பாக கவனவீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நீண்டகாலமாக கரைவலை மீன்பிடியில் ஈடுபடும் மீனவர்களே இவ்வாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தாங்கள் நீண்டகாலமாக கடற்றொழிலில் ஈடுபட்டுவருவதுடன் உழவியந்திரங்களை பயன்படுத்தி வருவதுடன் தற்போது உழவியந்திரங்களை பயன்படுத்தி கரைவலை இழுப்பதற்கு தடைவிதிக்கப்பட்டுள்ளதனால் மீனவர்கள் கடும் பாதிப்புகளை எதிர்கொண்டுள்ளதாக தெரிவித்தனர்.

உழவியந்திரம் மூலம் வலைகள் இழுப்பதற்கு தடைவிதிக்கப்பட்டுள்ளதன் காரணமாக மீனவர்களின் தொழில் பாதிக்கப்பட்டுள்ளதுடன் மீனவர்களின் குடும்பங்கள் கடும் பாதிப்புகளை எதிர்கொண்டுள்ளதாகவும் கூறினர்.

போராட்டத்தில் கலந்துகொண்டவர்கள் "வேண்டாம் வேண்டாம் மீனவர்களின் தற்கொலைக்கு காரணமாக வேண்டாம், வாழவிடு வாழவிடு கரைவலை மீனவர்களை வாழவிடு, நாடு அபிவிருத்தி அடைய வேண்டும் மீனவர்கள் கற்காலத்துக்கே திரும்பவேண்டுமா?, மீனவர்களின் அவலநிலை உங்களுக்கு தெரியவில்லையா?" போன்ற சுலோகங்கள் கொண்ட பதாகைகளை ஏந்தியவாறு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது, மட்டக்களப்பு கடற்றொழில் நீரியல்வள திணைக்கள உதவிப் பணிப்பாளர் போராட்டம் நடைபெற்ற இடத்துக்கு வந்து போராட்டத்தில் கலந்துகொண்டவர்களுடன் கலந்துரையாடியதுடன் அவரிடம் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது.

மீனவர்கள் அமைப்பினால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளை உரிய திணைக்கள தலைவருக்கு வழங்குவதுடன் இதற்கமைய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டது. (எ)

## பணி நீக்கப்பட்ட தொழிலாளர்களை மீள இணைக்கக்கோரி போராட்டம்

கொழும்பு, பெப். 07

பணி நீக்கப்பட்ட 8 தொழிலாளர்களையும் மீண்டும் இணைக்கக் கோரி போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

ஹொரண பெருந்தோட்ட நிறுவனத்துக்கு உட்பட்ட சாமிமலை, கவரவில தோட்டத்தில் பணியாற்றும் எட்டு தொழிலாளர்களின் சேவையை தோட்ட நிர்வாகம் இடைநிறுத்தியமைக்கு எதிர்ப்பு தெரிவித்து, பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள் நேற்று முன்தினம் காலை 07.30 மணி முதல் தோட்டத்தில் அமைந்துள்ள இந்து ஆலயத்துக்கு முன்பாக போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தங்களை உடனடியாக மீண்டும் பணியில் இணைக்க வேண்டும் என்றும் பணி இடைநிறுத்தம் செய்யப்பட்ட காலத்துக்கான நிலுவைச் சம்பளத்தை வழங்க வேண்டும் என்றும் வலியுறுத்தியே அவர்கள் இந்த போராட்டத்தை முன்னெடுத்தனர்.இது குறித்து அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

"தோட்டத்தில் பதிவு செய்யப்படாத வெளியாட்களை பயன்படுத்தி தேயிலை பறிக்கும் பணியை மேற்கொள்ள தோட்ட நிர்வாகம் எடுத்த தீர்மானத்துக்கு எதிர்ப்பு தெரிவித்தோம். இதன் காரணமாகவே, தங்களின் பணி தன்னிச்சையாக இடைநிறுத்தப்பட்டுள்ளது" என்று தொழிலாளர்கள் தெரிவித்தனர்.(எ)

## தொழுநோயாளர் அதிகம் சிகிச்சை பெறும் இரண்டாவது மாவட்டமாக மட்டக்களப்பு

மட்டக்களப்பு, பெப். 07

இலங்கையில் தொழுநோயாளர்கள் அதிகம் சிகிச்சை பெறும் 2ஆவது மாவட்டமாக மட்டக்களப்பு மாவட்டம் உள்ளது என்று சுகாதார அமைச்சின் சுகாதார, மக்கள் பிரிவின் பிரதிப் பணிப்பாளர் எஸ். எம். அர்னோல்ட் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் தலைமையில் ஆரையம்பதி பிரதேசத்தில் தொழுநோய் சிகிச்சை நிலையம் திறந்து வைக்கப்பட்டது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர்களின் நோய் நிலைமையை சரியாக கண்டறிந்து அவற்றுக்கான சிகிச்சையை வழங்குவதுடன் இந்த நோயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து இல்லாதொழிக்கும் நடவடிக்கையை எடுப்பதே எமது நோக்கமாகும்"- என்றார். (எ)

## கிழக்கு, மத்திய மாகாணங்களில் தொடர்ந்து மழை பெய்ய வாய்ப்பு

கொழும்பு, பெப். 07

கிழக்கு, ஊவா மற்றும் மத்திய மாகாணங்களிலும் பொலநறுவை மற்றும் அம்பாந்தோட்டை மாவட்டங்களிலும் அவ்வப்போது மழை பெய்யும் என்று எதிர்பார்க்கப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

ஊவா மற்றும் கிழக்கு மாகாணத்திலும் மட்டக்களப்பு, மாத்தளை மற் றும் நுவரெலியா மாவட்டங்க ளிலும் சில இடங்களில் 50 மில்லி மீற்றருக்கும் அதிகமான ஓரளவு பலத்த மழை வீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

வடக்கு மாகாணத்திலும் அநுராதபுரம் மாவட்டத்திலும் பல தடவைகள் மழை பெய்யும்.

நாட்டின் ஏனைய பிரதேசங்களில் பல இடங்களில் பிற்பகல் 02. 00 மணிக்கு பின்னர் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படு கின்றது. இரத்தினபுரி, களுத்துறை, காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களில் சில இடங்க ளில் 50 மில்லி மீற்றருக்கும் அதிகமான மழை வீழ்ச்சி எதிர்பார்க்கப்படு கின்றது.

வடக்கு மற்றும் வடமேல் மாகாணங்களிலும் மாத்தளை, திருகோணமலை மற்றும் அநுராதபுரம் மாவட்டங்களிலும் அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 30 - 40 கிலோ மீற்றர் வரையான வேகத்தில் ஓரளவு பலத்த காற்று வீசக் கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது. மேல், சப்ரகமுவ மற்றும் மத்திய மாகாணங்களிலும் காலி, மாத்தறை மற்றும் பதுளை மாவட்டங்களிலும் சில இடங்களில் அதிகாலை வேளையில் பனிமூட்டமான நிலை காணப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# சௌமியமூர்த்தி தொண்டமான் பெயரை நீக்குவதற்கு முயற்சிப்பதை ஏற்கமுடியாது

## இராதாகிருஷ்ணன் எம். பி. தெரிவிப்பு

கொழும்பு, பெப். 07

சௌமியமூர்த்தி தொண்டமான் என்ற பெயர் இந்த நாட்டின் அடையாளமாகும். அவர் மலையக மக்களுக்கு செய்த சேவைகளை வேறு எவராலும் ஈடுகொடுக்க முடியாது. இவ்வாறான ஒருவரின் பெயரை நிறுவனங்களுக்கு சூட்டியிருப்பதை நீக்க முயற்சிப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது என்று மலையக மக்கள் முன்னணியின் தலைவர் வே. இராதாகிருஷ்ணன் எம். பி. தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற கொள்கல நிலையத் தொழில்படுத்துநர்களுக்கு உரிமமளித்தல் சட்டமூலம் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,"பெருந்தோட்ட தொழிலாளர்களின் சம்பள அதிகரிப்பு விடயத்தில் நாங்கள் முழுமையாக சந்தோசப்படாவிட்டாலும் அரசாங்கம் கூறிய 1750 ரூபாயை கொடுத்தமையை நாங்கள் பாராட்ட வேண்டும். விசேடமாக கூட்டு ஒப்பந்த கால கட்டத்தில் பெருந் தோட்ட கம்பனிகள் எக்கார ணத்துக்காகவும் இணங்காத நிலையில் இம்முறை கம்பனி களை 200 ரூபாயை வழங்குவதற்கு சம்மதிக்க வைத்துள்ளதுடன் அரசாங்கமும் 200 ரூபாயை வழங்குகின்றது. இது வரவேற்கத்தக்கது.

எவ்வாறாயினும் சம்பள அதிகரிப்பை கொடுத்துவிட்டு அவர்களுக்கு கொழுந்து கிலோ அளவை அதிகரிக்கக்கூடாது என்பதனை கேட்டுக்கொள்கிறோம். முழுமையாக அந்த சம்பளத்தை தொழிலாளர்கள் பெற்றுக்கொள்ள தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும்"- என்றார். (எ)

தோட்டத் தொழிலாளர்களை வஞ்சித்தால்

## "தொழிற்சங்கங்களை ஒன்றிணைத்து ஆர்ப்பாட்டங்களை ஆரம்பிப்போம்"

கொழும்பு, பெப். 07

தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த சம்பளத்தை 400 ரூபாவால் அதிகரிப்பதற்கு, ஒரு நாளைக்கு 25 கிலோ தேயிலைக் கொழுந்து பறிக்குமாறு பெருந்தோட்ட நிறுவனங்கள் தொழிலாளர்களை வற்புறுத்துவதாக பாராளுமன்ற உறுப்பினர் பழனி திகாம்பரம் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிட்ட அவர், சம்பள உயர்வுக்கு முன்னர் 20 கிலோ கொழுந்தே பறிக்கப்பட்டதாக சுட்டிக்காட்டினார்.

மேலும் அவர் கூறுகையில்,

"தோட்டத் தொழிலாளர்களுக்கு 400 ரூபாய் சம்பளத்தை அதிகரித்து வழங்குமாறு அரசாங்கம் கூறியுள்ளது.

இம் மாதம் 10 ஆம் திகதி தான் அது கிடைக்கவுள்ளது. ஆனால் சம் பளத்தை அதிகரிக்க சொன்னவுடனேயே, இதுவரை 20 கிலோ கொழுந்து பறித்தவர் களிடம் கம்பனிகள் தற்போது 25 கிலோவை கொண்டுவரு மாறு கேட்கின்றன.

தோட்ட முகாமையாளர்கள் தமக்குத் தேவையான வகையில் வேலைகளை நிறுத்துகிறார்கள். மஸ்கெலியாவில் உள்ள தோட்டமொன்றில் 7 பேரின் வேலை நிறுத்தப்பட்டுள்ளது. வேலை நிறுத்தப்பட்டால் அவர்கள் எப்படி வாழ்வது?

அதனால் நான் அரசாங்கத்திடம் ஒன்று கூற விரும்புகிறேன், உடனடியாக இந்தக் கம்பனிகளுடன் கலந்துரையாடி இதற்குத் தீர்வைப் பெற்றுக்கொடுங்கள்.

இல்லாவிடின், எம்முடன் கோபப்பட வேண்டாம் நாம் தொழிற்சங் கங்களை ஒன்றிணைத்து ஆர்ப்பாட்டங்களை ஆரம் பிப்போம். பணிப்புறக்கணிப் புகளை ஆரம்பிப்போம். எமக்கு வேறு வழியில்லை."- என்றார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அவசரகால...

ஊழல் அற்ற நிர்வாகம், ஜனநாயகம் மற்றும் பொருளாதார சுபீட்சம் பற்றி பேச முடியாத எதிர்க்கட்சியில் உள்ள சிலரின் ஒரே கோசமாக இனவாதம் மாறிவிட்டது. வடக்கிலோ அல்லது தெற்கிலோ இனவாதம் மீண்டும் தலைதூக்க இடமளிக்கப்பட மாட்டாது.

நமது மிகப்பாரிய பலம் ஒற்றுமை என்றும், நமது நாட்டின் முக்கிய பலம் நாம் ஒன்று சேரும் இடத்தில் இருக்கிறது என்றும், அனைவரும் ஒன்றிணைவதன் மூலம் நாட்டை வலுவாகக் கட்டியெழுப்ப முடியும்.

கடந்த கால பாரம்பரியத்தின் அடிப்படையில், புதிய உலகத்திற்கு பொருத்தமான பொருளாதார மாற்றத்திற்கு அரசாங்கம் அர்ப்பணிப்புடன் உள்ளது. நமது அரசியல் வரலாற்றில், ஒவ்வொரு அரசியல் மேடையிலும் மோசடி மற்றும் ஊழலை ஒழிப்பதே முக்கிய தலைப்பாக இருந்தது.

முன்னாள் தலைவர்கள் அதற்காக பல்வேறு வாக்குறுதிகளை அளித்தனர். அதன்படி, நமது நாட்டில் அரசாங்கங்கள் மாறிய போது, மோசடி மற்றும் ஊழல் ஒரு முக்கிய தலைப்பாக மாறியது. நமது நாட்டின் அரசியல் மேடையில் மீண்டும் ஒருபோதும் மோசடி மற்றும் ஊழல் பற்றிய ஒரு முழக்கம் இருக்காது என்று நான் நினைக்கிறேன்.

மேலும், இந்நாட்டின் அரசியல் மேடையில் ஜனநாயகம் ஒரு முக்கிய தலைப்பாக மாறிவிட்டது. தேர்தல்களை ஒத்திவைப்பது, பத்திரிகையாளர்களைக் கொல்வது, வீதிகளில் இடம் பெறும் கொலைகள் பற்றிப் பேசப்பட்டது.

இந்த நாட்டில் மீண்டும் ஒருபோதும் ஜனநாயகத்திற்கு அச்சுறுத்தல் ஏற்படாது. அரசியல் மேடையில் மீண்டும் ஒருபோதும் ஜனநாயகம் பற்றிய முழக்கத்தை எழுப்ப வாய்ப்பு இருக்காது. மேலும், அரசியல் மேடைகளில் பொருளாதார வீழ்ச்சி பற்றி தொடர்ந்து பேசப்பட்டது. நமக்கு வெளியே உள்ள அரசியல் கட்சிகள் மீண்டும் பொருளாதார வீழ்ச்சி மற்றும் நாட்டை வறுமையிலிருந்து மீட்டெடுப்பது பற்றிய முழக்கங்களை அரசியல் மேடையில் முன்வைக்க வாய்ப்பு இருக்காது-என்றார். (அ)

## நீதிமன்ற...

விவரங்களை வெளிப்படுத்த கோரி யாழ்ப்பாண நீதவான் நீதிமன்றில் நடைபெற்று வரும் வழக்கு விசாரணைக்கு அப்போதைய பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷ நீதிமன்றில் முன்னிலையாவதை தவிர்த்து வருவதற்கு எதிர்ப்பு தெரிவித்து யாழில் போராட்டம் முன்னெடுக்கப் பட்டது.

யாழ் . நீதவான் நீதிமன்றில் லலித்குமார் வீரராஜ் மற்றும் குகன் முருகானந்தன் ஆகியோர் காணாமல் ஆக்கப்பட்டுள்ள நிலைமையில் அவர்கள் தொடர்பிலான விவரங்களை வெளிப்படுத்த கோரி யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டு வழக்கு விசாரணைகள் நடைபெற்று வருகின்றன.

குறித்த வழக்கு விசாரணைக்காக யாழ் . நீதவான் நீதிமன்றில் அப்போதைய பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷ முன்னிலையாகி சாட்சியமளிக்குமாறு நீதிமன்று கட்டளையிட்டுள்ளது.

குறித்த வழக்கு விசாரணைக்காக யாழ்ப்பாணம் வருகை தருவதற்கு தனக்கு பாதுகாப்பு அச்சுறுத்தல் இருப்பதாக தெரிவித்து , இணைய வழியில் சாட்சியம் அளிக்க தயார் என மன்றுக்கு கோட்டாபய சார்பில் முன்னிலையான சட்டத்தரணிகள் தெரிவித்தனர்.

கோட்டாபய ஜனாதிபதி வேட்பாளராக அறிவிக்கப்பட்டு ஜனாதிபதி தேர்தல் காலங்களிலும் , அதன் பின்னர் ஜனாதிபதியான பின்னரும் யாழ்ப்பாணம் வந்து சென்ற நிலையில் , வழக்கு விசாரணைக்காக வருவதை தவிர்ப்பதனை வழக்கு தொடுநர் தரப்பு சட்டத்தரணிகள் மன்றில் சுட்டிக்காட்டி இருந்தனர்.

அதனால், மன்று கோட்டாபயவுக்கு உள்ள பாதுகாப்பு அச்சுறுத்தல் தொடர்பில் சத்திய கடதாசி ஊடாக மன்றுக்கு தெரிவிக்குமாறு மன்று கட்டளையிட்டுள்ளது.

இந்நிலையில் குறித்த வழக்கு இன்றைய தினம் விசாரணைக்கு எடுத்து கொள்ளப்பட்ட போதிலும் கோட்டபாய மன்றில் முன்னிலையாகவில்லை.

அதனை அடுத்து இரு தரப்பு சட்டத்தரணிகளும் எழுத்து மூல சமர்ப்பனங்களை செய்யுமாறு மன்று கட்டளையிட்டு , வழக்கினை மார்ச் மாதம் 06ஆம் திகதிக்கு திகதியிட்டுள்ளது.

இந்நிலையில் , கோட்டாபய நீதிமன்றத்தைத் தொடர்ச்சியாகப் புறக்கணிப்பதற்கு எதிராகவும் அனைத்துக் காணாமலாக்கப்படல்களுக்கும் நீதியை நிலைநாட்ட கோரியும் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. (அ)

## ஜெய்சங்கர்...

மேலும் வலுப்ப டுத்துவது தொடர்பில் இதன்போது பேச்சு நடத்தப் பட்டுள்ளது.

டித்வா புயலின்போது இலங்கைக்கு இந்தியா வழங்கிய ஒத்துழைப்புகளுக்கு ரில்வின் சில்வா நன்றி தெரிவித்தார்.

இலங்கைக்கான தமது நாட்டு ஆதரவை இந்திய வெளிவிவகார அமைச்சர் உறுதிப்படுத்தினார். இலங்கை மீண்டெழுவதற்கு இந்தியாவின் உதவிகள் தொடரும் எனவும் உறுதியளித்துள்ளார். (அ)

## சுகாதாரத்துறை...

தோல்வியடைந்துள்ளதாகச் சுட்டிக்காட்டிய சங்கம், இதனால் பொதுமக்களுக்கான மருத்துவ சேவைகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தது.

குறிப்பாக, வைத்தியசாலைகளில் நிலவும் அத்தியாவசிய மருந்துப் பொருட்களுக்கான தட்டுப்பாடு, பரிசோதனைகளை மேற்கொள்வதற்கான வசதியின்மை மற்றும் மருத்துவ உபகரணங்களின் பற்றாக்குறை ஆகியன நோயாளிகளைப் பெரும் அவதிக்குள்ளாக்கியுள்ளதாக அவர்கள் குறிப்பிட்டனர்.

சரியான நேரத்தில் சிகிச்சை வழங்கப்படாமை மற்றும் முறையான பரிசோதனைகள் முன்னெடுக்கப்படாமை காரணமாக, நோயாளிகள் பாரிய உடல்நலப் பாதிப்புகளை எதிர்கொள்வதோடு, இது ஒட்டுமொத்த சுகாதாரக் கட்டமைப்புமே முடங்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாகச் சங்கம் சுட்டிக்காட்டியது.

மேலும், நோயாளிகளின் வலிகளையும் தேவைகளையும் உணர்ந்து செயற்பட அரசாங்கம் தவறி வருவதாகக் குற்றம் சாட்டிய அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தினர், மக்கள் நலனை முன்னிறுத்தி இந்த நெருக்கடிகளுக்கு உடனடியாகத் தீர்வுகாண முன்வருமாறு சுகாதார அதிகாரிகளை வலியுறுத்தினர். (அ)

## அவசரகால நீடிப்பிற்கு...

கடந்துவிட்ட நிலையில், நிலைமை தற்பொழுது வழமைக்குத் திரும்பியுள்ளதாக அரசாங்கமே ஒப்புக்கொண்டுள்ளது. ஜனவரி 28ஆம் திகதி வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலின்படி, துண்டுப் பிரசுரங்களை விநியோகிப்பதைக் கட்டுப்படுத்தவும், அரசாங்கத்திற்கு எதிரான கருத்து வெளிப்பாடுகளை ஒடுக்கவும் இந்தச் சட்டம் பயன்படுத்தப்படுகிறது. மக்கள் போராடுவதையும், வீதி மறியலில் ஈடுபடுவதையும் தடுப்பதே அரசாங்கத்தின் உண்மையான நோக்கம், நிவாரணப் பணிகளுக்காக இந்தச் சட்டம் அவசியமில்லை.அரசாங்கத்தை விடவும் எதிர்க்கட்சிகளும் பொதுமக்களுமே பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தேவையான உடனடி உதவிகளை வழங்கியுள்ளனர்.

இதற்கு பதிலளித்த பிரதமர் ஹரிணி அமரசூரிய, நாட்டின் உள்கட்டமைப்புகள் குறிப்பாக வீதிகள், பாலங்கள் மற்றும் பாடசாலைகள் முன்னெப்போதும் இல்லாத வகையில் பாதிக்கப்பட்டுள்ளன. தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனத்தின் அறிக்கைகளின்படி, சுமார் 1,300 நிலச் சரிவுகள் பதிவாகியுள்ளன.

பாதிக்கப்பட்ட பகுதிகளில் வளங்களையும் மனித உழைப்பையும் மிக விரைவாகவும் வினைத்திறனாகவும் ஒருங்கிணைத்து, மக்களின் இயல்பு வாழ்க்கையை மீட்டெடுக்க அவசரகால சட்டம் தேவைப்படுகிறது. உணவு, நீர் மற்றும் போக்குவரத்து போன்ற அத்தியாவசிய சேவைகளை எவ்வித தடையுமின்றி தொடர்ச்சியாக வழங்குவதை உறுதிப்படுத்தவே இந்த நீடிப்பு கோரப்பட்டுள்ளது-என்றார். (அ)

## எமது நெல்லை...

கூட்டுறவுத்துறை ஆலைகளை வலுப் படுத்த நடவடிக்கை எடுப்போம் என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

வடக்கு மாகாணத்திலுள்ள தனியார் மற்றும் கூட்டுறவுத்துறை அரிசி ஆலை உரிமையாளர்கள், அரச மற்றும் தனியார் வங்கிப் பிராந்திய முகாமையாளர்கள் ஆகியோருடனான விசேட கலந்துரையாடல் ஆளுநர் செயலகத்தில் நேற்று வெள்ளிக்கிழமை மாலை நடைபெற்றது.

இதன்போது கருத்துத் தெரிவித்த ஆளுநர் மேலும் கூறியதாவது:

எமது மாகாணத்தின் தேவைக்கு மேலதிகமாகவே நெல் உற்பத்தி செய்யப்படுகின்றது. உபரியான நெல்லை வெளியே அனுப்புவதில் தவறில்லை. ஆனால், எமது மக்களின் தேவைக்கான நெல்லையும் வெளியே அனுப்பிவிட்டு, அதையே மீண்டும் அரிசியாக அதிக விலைக்கு வாங்குவது ஆரோக்கியமானதல்ல. உள்ளூர் அரிசி ஆலை உரிமையாளர்களுக்குப் போதிய கடன் வசதிகளை வழங்கி, அவர்கள் ஊடாக நெல்லைக் கொள்வனவு செய்யவும், அதனை இங்கேயே அரிசியாக மாற்றவும் நாம் முயற்சிக்கின்றோம்- என்றார்.

விவசாயிகள் நெல்லை அறுவடை செய்யும் காலப்பகுதியிலேயே அரிசி ஆலை உரிமையாளர்களுக்குப் போதியளவு பணம் தேவைப்படுகின்றது. எனினும், அக்காலப்பகுதியில் வங்கிக் கடன்கள் கிடைப்பதில் தாமதம் நிலவுவதாக ஆலை உரிமையாளர்கள் சுட்டிக்காட்டினர். இதனைக் கருத்திற் கொண்டு, அடுத்த போகத்திலிருந்தாவது உரிய காலத்தில் வங்கிக் கடன்களைப் பெற்றுக்கொள்வதற்கான பொறிமுறையை உருவாக்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டது.

அரிசி ஆலைகளுக்குப் போதியளவு உலர்த்திகள் இல்லாமை பெரும் குறைப்பாடாக உள்ளது. உலர்த்திகளைக் கொள்வனவு செய்வதற்கு வங்கிகள் ஊடாக வழங்கக்கூடிய கடன் சலுகைகள் தொடர்பில் இதன்போது தெளிவுபடுத்தப்பட்டது. மேலும், வடக்கு மாகாணத்தில் தற்போதுள்ள உலர்த்திகள் மற்றும் களஞ்சிய வசதிகள் தொடர்பான தரவுகளைத் திரட்டி, எதிர்காலத் தேவைகளைத் திட்டமிடவும் முடிவு செய்யப்பட்டது.

விவசாயிகள் உரிய பருவ காலத்திற்கு முன்னரே நெல்லை அறுவடை செய்வதால், அரிசி ஆலை உரிமையாளர்கள் தரம் சார்ந்த சவால்களை எதிர்கொள்கின்றனர். எனவே, முற்றிய நிலையில் நெல்லை அறுவடை செய்வதன் நன்மைகள் குறித்தும், நவீன நெல் நடுகை முறைகள் குறித்தும் விவசாயிகளுக்குத் தெளிவூட்டல் வழங்கப்பட வேண்டும் என வலியுறுத்தப்பட்டது.

இக்கலந்துரையாடலில் இலங்கை மத்திய வங்கியின் வட பிராந்திய முகாமையாளர், அரச மற்றும் தனியார் வங்கிகளின் பிராந்திய முகாமையாளர்கள், அரிசி ஆலை உரிமையாளர்கள் மற்றும் ஆளுநரின் ஆலோசனைக்குழு உறுப்பினர் கலாநிதி அகிலன் கதிர்காமர் தலைமையிலான குழுவினரும் கலந்து கொண்டனர். (அ)

## 2027ஆம்...

உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அரச சேவையைப் பொறுத்தவரை அடிப்படைச் சம்பள உயர்வே முக்கியம் என்று நாங்கள் கருதினோம்.

அந்த அடிப்படைச் சம்பள உயர்வுக்காக மாத்திரம் 2025 ஆம் ஆண்டில் 11,000 கோடி ரூபா செலவிடப்பட்டுள்ளது.

2026 ஆம் ஆண்டு இந்த ஜனவரி மாதத்திலேயே மேலும் 11,000 கோடி ரூபா செலவிடப்படுகிறது. 2027 இல் அடுத்த கட்டமாக 11,000 கோடி ரூபா செலவிடப்படவுள்ளது. 2027 ஆகும்போது எமது அரச சேவையின் சம்பள உயர்வுக்காக மாத்திரம் நாங்கள் ஏற்கும் செலவு 33,000 கோடி ரூபாவாகும். இவ்வாறு சம்பள உயர்வு செய்திருக்கும் நிலையில், சிலர் மீண்டும் இந்தக் கொடுப்பனவை கூட்டுங்கள், அந்தக் கொடுப்பனவை கூட்டுங்கள் என்று கேட்பதை நான் காண்கிறேன். அது நடக்காது.

முதலில் நாங்கள் 2027 இல் மூன்றாவது சம்பள அதிகரிப்பு வந்த பின்னர், எமது வரவு செலவுத் திட்டத்திற்கு ஏற்படும் தாக்கத்தைப் பார்த்துவிட்டுத்தான் ஏனைய கொடுப்பனவுகள் பற்றி யோசிப்போம்.

அதனால் யார் எவ்விதத்தில் ஆர்ப்பாட்டம் செய்தாலும், வீதியில் இறங்கினாலும் 2027 ஆம் ஆண்டு அடுத்த சம்பள உயர்வு வரும் வரை கொடுப்பனவுகள் அதிகரிக்கப்பட மாட்டாது. இந்த அனர்த்தத்தினால் எமது பொருளாதாரம் வீழ்ச்சியடையும் எனப் பலர் நினைத்தார்கள்.

ஆனால் இரண்டு மாதங்களுக்குள் நாங்கள் ஒட்டுமொத்தமாக இயல்பு நிலைக்குத் திரும்பியுள்ளோம். மின்சாரம், வீதிகள், தொடர்பாடல், நீர் எனப் பாரிய அளவில் மீண்டுள்ளோம். எமக்குத் தேவை இந்த நாடு அடையும் பொருளாதார வெற்றிகளை நாட்டு மக்களுக்குப் பகிர்ந்து கொடுப்பதேயாகும். அதேபோல் சட்டத்தின் ஆட்சியை நாங்கள் உறுதிப்படுத்த வேண்டும்.

இதைச் செய்தே தீருவோம், யாரும் சந்தேகம் கொள்ள வேண்டாம். சட்டவிரோதமாக ஈட்டிய சொத்துக்களை அரசுடமையாக்குவதற்கு ஏதுவான சட்டத்தை நாங்கள் கடந்த வருடம் ஏப்ரல் மாதத்தில் நிறைவேற்றினோம்.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தைத் திருத்தி விரைவில் கொண்டு வருவோம். ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்களை ஒடுக்குவதற்குச் சட்டம் தயாரிக்கப்படுகிறது. அதேபோல் பணமோசடியைத் தடுப்பதற்கு சர்வதேசத் தரத்திற்கு அமைய சட்டமொன்றைத் தயாரிக்கப் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்று வருகின்றன. சட்டத்தின் கோடு ஒன்று உள்ளது. அந்தக் கோட்டிற்குக் கீழேதான் அனைவரும் உள்ளனர். யாரும் சட்டத்தின் கோட்டிற்கு மேலே பாய முடியாது. அப்படியான ஒரு நாடுதான் எமக்குத் தேவை. அதனை நாங்கள் மாற்றியமைத்துக் கொண்டிருக்கிறோம். இந்த மாற்றம் சிலருக்கு வலிக்கிறது. தவறு செய்பவர்களுக்கு இந்த மாற்றம் வலிக்கிறது-என்றார். (அ)

## கட்டுநாயக்கவில்...

விடுதியில் தங்கியிருந்த மன்னாரை சேர்ந்த தொழில்நுட்பவியலாளர் உள்ளிட்ட இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தாய்லாந்தில் இருந்து நேற்று வெள்ளிக்கிழமை நாட்டை வந்தடைந்த விமானத்தில் வந்த பயணி ஒருவரின் பயண பையில் இருந்து 2 கிலோ 116 கிராம் எடையுள்ள சுமார் 2 கோடியே 11 இலட்ச ரூபாய் பெறுமதியான குஷ் போதை பொருள் மீட்கப்பட்டுள்ளது.

அதனை அடுத்து குறித்த பயணியை கைது செய்து விசாரணைகளை மேற்கொண்ட போது, குறித்த பயணி மானிப்பாய் பகுதியை சேர்ந்த 26 வயதுடைய இளம் வர்த்தகர் எனவும் , வர்த்தக நோக்கம் என கூறி பல தடவைகள் வெளிநாடு சென்று வந்திருந்தமையும் தெரியவந்துள்ளது.

தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் , தான் கொண்டு வந்திருந்த போதைப்பொருளை வாங்குவதற்காக நீர்கொழும்பு பகுதியில் உள்ள பிரபல நட்சத்திர விடுதியில் இருவர் காத்திருப்பதாகவும் அவர்கள் தொடர்பிலான தகவல்களையும் கைதான நபர் பொலிஸாருக்கு வழங்கியுள்ளார்.

அதன் அடிப்படையில் குறித்த விடுதிக்கு சென்ற பொலிஸார் , போதைப்பொருளை வாங்க காத்திருந்த இருவரையும் கைது செய்தனர். கைது செய்யப்பட்ட இருவரும் மன்னார் பகுதியை சேர்ந்த 43 மற்றும் 36 வயதுடையவர்கள் எனவும் , அவர்களில் ஒருவர் தொழிநுட்பவியலாளர் எனவும் விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

கைது செய்யப்பட்ட மூவரையும் பொலிஸார் தடுத்து வைத்து மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

## மோட்டார்...

சேர்ந்த சிவகுமார் கரிஸ்ணன் (வயது 16) என்ற மாணவனே மரணமடைந்தவராவார்.

இது தொடர்பில் பூவரசன்குளம் பொலிஸார் விசாரணைகளை மேற்கெண்டு வருகின்றனர். (அ)

## மாகாண...

நேற்றைய பாராளுமன்ற அமர்வில் பங்கேற்று உரை யாற்றிய போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மாகாண சபைத் தேர்தல்கள் தொடர்பில் ஒரு தீர்வைக் காண்பதற்காக, பாராளுமன்றத் தெரிவுக்குழு ஒன்றைத் நியமிப்பதற்கான பிரேரணை கடந்த 2026

ஜனவரி 6ஆம் திகதி இந்த பாராளுமன்றில் நிறைவேற்றப்பட்டது.ஜனவரி 6ஆம் திகதி முதல் எதிர்க்கட்சியானது தனது பிரதிநிதிகளாக எனது பெயர், ரஞ்சித் மத்துமபண்டார, நிசாம் காரியப்பர் மற்றும் மனோ கணேசன் ஆகிய நான்கு பெயர்களையும் அனுப்பி வைத்துள்ளது. ஆனால், தீர்மானம் நிறைவேற்றப்பட்டு ஒரு மாதம் கடந்தும் அரசாங்கம் இதுவரை தமது பெயர்களை அனுப்பவில்லை.

இது மாகாண சபைத் தேர்தல்களைத் தாமதப்படுத்துவதற்கான அரசாங்கத்தின் தெளிவான நகர்வாகும். வெளிவிவகார அமைச்சர் இன்று காலை உள்நாட்டு பொறிமுறைகள் பற்றிப் பேசினார். வன்முறைகள் மீண்டும் ஏற்படாது என்பதை உறுதிப்படுத்த வேண்டுமாயின், குறைந்தபட்சம் ஏதாவதொரு அதிகாரப் பகிர்வு மாதிரியாவது இருக்க வேண்டும். ஆனால் அறிவிப்பு வெளியாகி ஒரு மாதமாகியும் அரசாங்கம் சார்பில் நீங்கள் இன்னும் பெயர்களை வழங்கவில்லை. இது மாகாண சபைத் தேர்தல்களைத் தள்ளிப்போடும் ஒரு திட்டமிட்ட செயலாகும். பிரதமரும் இந்தச் சபையில் இருக்கிறார். தயவு செய்து இதில் தலையிட்டு நடவடிக்கை எடுங்கள். எதிர்க்கட்சி தனது பெயர்களை ஏற்கனவே அனுப்பிவிட்டது - என்றார்.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# எம்.பி.க்களின் ஓய்வூதிய ரத்து சட்டமூலம் அரசமைப்புக்கு முரண்பாடானது இல்லை

## உயர்நீதிமன்ற தீர்ப்பை அறிவித்தார் சபாநாயகர்

கொழும்பு, பெப். 07

பாராளுமன்ற உறுப்பினர்களுக்குரிய ஓய்வூதியத்தை இரத்து செய்யும் சட்டமூலம் அரசமைப்புக்கு முரணானது அல்ல என்று உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

எனவே, சாதாரண பெரும்பான்மையுடன் மேற்படி சட்டமூலத்தை நிறைவேற்ற முடியும் என்றும் அந்தத் தீர்ப்பில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளதாக நேற்றைய தினம் பாராளுமன்றத்தில் சபாநாயகர் தெரிவித்தார்.

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் ஓய்வூதியம் இரத்து செய்யப்படும் என்று தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் உறுதியளித்திருந்தது.

இது தொடர்பில் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு, அமைச்சரவை அனுமதியுடன் வர்த்தமானி வெளியிடப்பட்டது. அதன்பின்னர் சட்டமூலம் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டது.

இதற்கு எதிராக சிலர் உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தனர். தாக்கல் செய்யப்பட்ட மனுக்களை விசாரித்த பின்னர், உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு சபாநாயகருக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அந்தத் தீர்ப்பை சபாநாயகர் நேற்று வெள்ளிக்கிழமை பாராளுமன்றத்தில் அறிவித்தார்.

சட்டமூலத்தின் எந்த விதிகளும் அரசமைப்பு விதிகளை மீறவில்லை என்பதை உயர்நீதிமன்றம் உறுதிப்படுத்தியுள்ளது என்று சபாநாயகர் கூறினார். (ஐ)

## நிபா வைரஸ் பரவலை தடுக்க தயார்ப்படுத்தல்கள் தீவிரம்!

கொழும்பு, பெப். 07

நிபா வைரஸ் (ஹைை) பரவலை கண்டறியவும் அதற்கு பதிலளிக்கவும் சுகாதாரத் துறை தயார்படுத்தல்களை தீவிரப்படுத்தி வருகிறது என்று தெரிவிக்கப்பட்டது.

இலங்கையின் முதன்மை ஆய்வகமான மருத்துவ ஆராய்ச்சி ஸ்தாபனம் நிபா வைரஸை கண்டறியும் திறனை அதீத தொழில்நுட்பத்துடன் மேம்படுத்தியுள்ளது.

இதன்மூலம் வைரஸ் தொற்று சந்தேகத்திற்குரிய நபர்களுக்கு ஆரம்பத்திலேயே பரிசோதனைகளை மேற்கொண்டு வைரஸ் பாதிப்பை உறுதி செய்ய முடியும். இதற்காக நவீன தொழில்நுட்பக் கருவிகள் ஆய்வகத்தில் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன என மருத்துவ ஆராய்ச்சி ஸ்தாபனம் வட்டாரம் தெரிவித்துள்ளது.

நிபா வைரஸ் விலங்குகளிடமிருந்து மனிதர்களுக்குப் பரவும் ஒரு வகை நச்சுயிரி ஆகும். முக்கியமாக "பழம் தின்னும் வௌவால்கள்" மூலம் பரவுகிறது. அசுத்தமான உணவு மற்றும் பாதிக்கப்பட்ட மனிதர்களுடனான நேரடித் தொடர்பின் மூலமும் இது பரவக்கூடும்.

இந்த வைரஸால் பாதிக்கப்படுபவர்களில் 40 வீதம் முதல் 75 வீதம் வரை உயிரிழக்க வாய்ப்புள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

இது மிகவும் ஆபத்தான தொற்றுநோய்களில் ஒனறாகக் கருதப்படுகிறது. தற்போது இந்த வைரஸுக்கு சிகிச்சையளிக்கத் தடுப்பூசிகளோ அல்லது பிரத்யேக மருந்துகளோ இல்லை. தீவிரமான மருத்துவக் கண்காணிப்பு மட்டுமே ஒரே வழி ஆகும். (ஐ)

## 62 ஆயிரம் ஆமை குஞ்சுகள் 2025இல் கடலில் விடப்பட்டன

கொழும்பு, பெப். 07

இலங்கை கடலோரக் காவல் படையால் முன்னெடுக்கப்பட்டு வரும் ஆமைகள் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் கடந்த ஆண்டில் மாத்திரம் 62 ஆயிரத்து 352 ஆமை குஞ்சுகள் பாதுகாப்பாகக் கடலில் விடப்பட்டன.

நாடளாவிய ரீதியில் தெரிவு செய்யப்பட்ட 14 கடற்கரை பகுதிகளிலிருந்து இந்த ஆமை குஞ்சுகள் விடப்பட்டன.

அழிந்து வரும் நிலையில் உள்ள கடல் ஆமை இனங்களையும், அவை முட்டையிடும் இடங்களையும் பாதுகாக்கும் நோக்கில் 2016 ஆம் ஆண்டு இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

கடலோர காவல் படையினர் ஆமைகள் முட்டையிடும் இடங்களைக் கண்காணித்து, குஞ்சுகள் பொரிக்கும் வரையான பராமரிப்புப் பணிகளைத் தொடர்ச்சியாக முன்னெடுத்து வருகின்றனர்.

இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து இதுவரை ஒரு இலட்சத்து 91 ஆயிரத்துக்கும் அதிகமான ஆமைக் குஞ்சுகள் பாதுகாப்பாக கடலில் விடப்பட்டுள்ளன.

இலங்கைக் கடற்கரைகளை தங்களது இனப்பெருக்க இடங்களாகக் கொள்ளும் பச்சை ஆமை மற்றும் ஒலிவ் ரிட்லி உள்ளிட்ட ஐந்து வகையான கடல் ஆமை இனங்கள் இந்தத் திட்டத்தின் மூலம் பாதுகாக்கப்படுகின்றன. (ஐ)

## மாணவர் குழுக்கள் மோதல் 7 பேர் வைத்தியசாலையில்!

கொழும்பு, பெப். 07

களுத்துறையில் பேருவளை கல்வி வலயத்திற்கு உட்பட்ட இரண்டு பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர் குழுக்களுக்கு இடையில் ஏற்பட்ட தகராறில் 7 மாணவர்கள் காயமடைந்துள்ளதாக அளுத்கம பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த சம்பவம் நேற்று முன் தினம் வியாழக்கிழமை இடம்பெற்றுள்ளது.

இவ்வாண்டு இடம்பெறவுள்ள க.பொ.த சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றவுள்ள பாடசாலை மாணவர்களுக்காக இடம்பெற்ற விசேட வகுப்பில் கலந்துகொண்ட இரண்டு பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர் குழுக்களுக்கு இடையில் தகராறு ஏற்பட்டுள்ளது.

தகராறில் 7 மாணவர்கள் காயமடைந்துள்ள நிலையில் சிகிச்சைக்காக களுத்துறை போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (அ)

- இலங்கை பெண்கள் தொடர்பான -

## சர்ச்சை பேச்சுக்காக மன்னிப்பு கோரினார் தென்கொரிய ஆளுநர்

சியோல், பெப். 07

இலங்கை பெண்களை இழிவுபடுத்தும் விதமாக சர்ச்சை கருத்தை வெளியிட்டமைக்காக தென்கொரியாவின் ஜின்டோ மாகாண ஆளுநர் மன்னிப்பு கோரியுள்ளார்.

மாகாண பொதுக்கூட்டம் ஒன்றில் உரையாற்றிய ஆளுநுர் கிம் ஹீ சூ, "கிராமப்புற மக்கள் தொகை சரிவுக்கு தீர்வாக இலங்கை மற்றும் வியட்நாமிய கன்னிப் பெண்களை இறக்குமதி செய்ய வேண்டும்", என்று கூறியிருந்தார்.

நேரலையில் ஒளிபரப்பான இந்தப் பேச்சு பெண்களை போகப்பொருளாக சித்தரிக்கிறது. அவரின் உரை பெண்களுக்கு இழைக்கப்பட்ட அவமானம் என்று தென்கொரியாவிலும் சர்வதேச அளவிலும் விமர்சனங்கள் எழுந்தன.

அத்துடன், இலங்கை, வியட்நாமிய பெண்களை குறிப்பிட்ட விதம் இனவெறி மற்றும் பாலின பாகுபாடு கொண்டது என்றும் சுட்டிக்காட்டப்பட்டது.

இந்த நிலையில், "எனது வார்த்தைப் பிரயோகம் தவறானது. எந்தவொரு நாட்டையோ அல்லது சமூகத்தையோ புண்படுத்தும் நோக்கம் எனக்கு இருக்கவில்லை. கிராமப்புறங்களுக்கு இளைஞர்களை ஈர்ப்பதில் உள்ள சவால்களைக் குறிப்பிடவே அவ்வாறு உரையாற்றினேன்", என்று குறிப்பிட்டு தனது உரைக்காக ஆளுநர் மன்னிப்பு கோரியுள்ளார். (ஐ)

சாதாரண தர பரீட்சை:

## 11ஆம் திகதி நள்ளிரவு முதல் மேலதிக வகுப்புகளுக்கு தடை

கொழும்பு, பெப். 07

க. பொ. த. சாதாரண தரப் பரீட்சை எதிர்வரும் 17ஆம் திகதி ஆரம்பமாகிறது. இதனால், எதிர்வரும் 11 ஆம் திகதி நள்ளிரவு முதல் பரீட்சை நிறைவடையும் வரை மேலதிக வகுப்புகள் நடத்துவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் பரீட்சைகள் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில்,

"பரீட்சைகள் 2025 மார்ச் 17ஆம் திகதி முதல் மார்ச் 26ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. நாடளாவிய ரீதியில் 3 ஆயிரத்து 545 பரீட்சை மத்திய நிலையங்களில் இந்தப் பரீட்சை நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 11ஆம் திகதி நள்ளிரவு முதல் பரீட்சை முடியும் வரை பரீட்சார்த்திகளுக்கான மேலதிக வகுப்புகள்,

கருத்தரங்குகளை நடத்துதல், பாடங்கள் தொடர்பான செயலமர்வுகள் வழிகாட்டல்களை நடத்துதல்,

பரீட்சை வினாத்தாள்களை ஒத்த மாதிரி வினாத்தாள்களை அச்சிடுதல் மற்றும் விநியோகித்தல், வினாக்கள் முன்கூட்டியே வழங்கப்படும் எனச் சுவரொட்டிகள்,

பதாகைகள் அல்லது சமூக வலைத்தளங் கள் வாயிலாக விளம்பரப்படுத்துதல் என்பன தடைசெய்யப்பட்டுள்ளன.

பரீட்சைத் திணைக்களத்தின் இந்த உத்தரவை மீறிச் செயல்படும் நபர்கள் அல்லது நிறுவனங்களுக்கு எதிராகப் பரீட்சைகள் சட்டத்தின் கீழ் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

பரீட்சை தொடர்பான முறைகேடுகள் அல்லது விதிகளை மீறுவோர் குறித்து பரீட்சைத் திணைக்கள அவசர இலக்கம்: 1911 மற்றும் காவல்துறை தலைமை யகம்: 011 242 1111 என்பவற்றுக்கு அறிவிக்கமுடியும்.", என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## போதைப்பொருள் பாவித்த 8 பேருந்து சாரதிகள் கைது!

கொழும்பு, பெப். 07

போதைப்பொருள் பயன்படுத்திய பேருந்து சாரதிகள், நடத்துநர்கள் 8 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பு - மொறட்டுவை பேருந்து நிலையத்திலிருந்து பணியில் ஈடுபடுவோர்மீது நடத்தப்பட்ட போதைப்பொருள் பரிசோனையிலேயே இவர்கள் கண்டறியப்பட்டு கைது செய்யப்பட்டனர்.

இந்த சோதனையில் சுமார் 250 பேருந்து சாரதிகளும் நடத்துநர்களும் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். இதில் 8 பேர் போதைப்பொருள் பயன்படுத்தியமை கண்டறியப்பட்டு கைது செய்யப்பட்டனர்.

கைதானவர்களில் ஐவர் கஞ்சா, இருவர், ஒருவர் ஐஸ் போதைப்பொருளும் பயன்படுத்தியிருந்தனர். கைதான எண்மரையும் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ஐ)

## இ. போ. ச. பேருந்து சேவைக்கு பெண் நடத்துநர்கள் நியமனம்

கொழும்பு, பெப். 07

வரலாற்றில் முதன்முறையாக இலங்கைப் போக்குவரத்து சபைக்கு பெண்கள் நடத்துநர்களாகச் சேவையில் இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளனர்.

இலங்கை போக்குவரத்து சபைக்கு புதிதாக தெரிவு செய்யப்பட்ட 20 பெண் நடத்துநர்களுக்கு நியமன கடிதங்களை வழங்கும் நிகழ்வு நேற்று வெள்ளிக்கிழமை மாகும்புர பல்நோக்கு போக்குவரத்து மத்திய நிலையத்தில் நடைபெற்றது.

வெகுஜன ஊடகத் துறை பிரதி அமைச்சர் கௌசல்யா ஆரியரத்ன, பாராளுமன்ற உறுப்பினர் சமன்மலி குணசிங்க, இலங்கை போக்குவரத்து சபையின் தலைவர் சஜீவ கனகரத்ன ஆகியோரின் பங்கேற்புடன் இந்த நிகழ்வு நடைபெற்றது.

நியமனம் பெற்ற பெண் நடத்துநர்களுக்காக புதிய சீருடை ஒன்றும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)



## கெஹலியவின் மகள் கைது

கொழும்பு, பெப். 07

முன்னாள் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவின் மகளான சமித்ரி ரம்புக்வெல இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழு அதிகாரிகளால் நேற்று வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டார்.

3 கோடி ரூபாய் பணத்தை மோசடி செய்த குற்றச்சாட்டு தொடர்பிலேயே சமித்ரி ரம்புக்வெல்ல கைது செய்யப்பட்டார் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஏற்கனவே கெஹலிய ரம்புக்வெலவின் மனைவி, ஏனைய மகள்கள்மீதும் இதேபோன்ற குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு நீதிமன்ற நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில், தற்போது மூத்த மகளும் கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 07.02.2026 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.